பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பொதுத் தனியன்கள்.

நம்பெருமாள் அருளிச்செய்தது.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍 ।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥ * * *

பதவுரை.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶 𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌮𑍍	திருமலையாழ்வார் என்னும் திருவாய்மொழிப்பிள்ளையின் திருவருளுக்குப் பாத்ரபூதராய்
𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁 𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍	ஞானம், பக்தி முதலிய நற்குணங்களுக்குக் கடல்போன்றவராய்
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌮𑍍	எம்பெருமானார் பக்கலிலே ப்ராவண்யமுடையரான
𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇	ஸ்ரீமணவாளமாமுனிகளை வணங்குகின்றேன்.

குறிப்பு:— "𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌮𑍍" என்கிற விது - மணவாளமாமுனிகளுக்கு அஸாதாரணமான நிரூபகம். ... ...

கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.

𑌲𑌕𑍍𑌷𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍 ॥

𑌲𑌕𑍍𑌷𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌮𑍍—ஸ்ரிய:பதியைத் தொடக்கத்திலே உடைத்தாய்

𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌧𑍍𑌯 𑌮𑌾𑌮𑍍	ஸ்ரீமந்நாதமுனிகளையும், ஆளவந்தாரையும் இடையிலே உடைத்தாய்.

அஸ்மதாசார்ய பர்யந்தாம் } எமக்கு ஆசார்யரான எம்பெருமானாரை முடிவிலே உடைத்தான

வந்தே குருபரம்பராம்—ஆசார்யபரம்பரையை வணங்குகின்றேன்.

குறிப்பு:— உடையவர்தாம் குருபரம்பரைக்கு நடுநாயகமாயிராகின் றுரேயாகிலும், ஆழ்வானுக்கு ஸாக்ஷாதாசார்யரானமை பற்றி, இங்ஙனருளிச் செய்தருளினர். ... ...

இதுவும் ஆழ்வானருளிச் செய்தது.

யோ நித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே ।
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

ய:—யாவரொரு எம்பெருமானார், நித்யம்—எந்நாளும்

அச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோஹத: } எம்பெருமானுடைய திருவடித்தாமரையிணைகளாகிற ஸுவர்ணத்திலுள்ள மிகுந்தவிருப்பத்தாலே.

ததிதராணி—அத்திருவடிகளுக்குப் புறம்பாயுள்ள விஷயங்களை

த்ருணாய மேநே—த்ருணப்ராயமாகத் திருவுள்ளம் பற்றினரோ,

அஸ்மத்குரோ:—எமக்கு ஆசார்யராய்

பகவத:—ஸமஸ்த கல்யாணகுணபரிபூர்ணராய்

தயைகஸிந்தோ:—தயாகுணத்துக்கு முக்யஸமுத்ரம் போன்றவரான

அஸ்ய ராமாநுஜஸ்ய—இப்படிப்பட்ட எம்பெருமானாருடைய

சரணௌ சரணம் ப்ரபத்யே—திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்.

குறிப்பு:— இந்த ச்லோகம்— ஆழ்வானருளிச்செய்த பஞ்சஸ்தவத்தின் முதல் ஸ்தவமான ஸ்ரீவைகுண்டஸ்தவத்தின் முதல் ச்லோகம். "அஸ்மத்குரோ:" என்ற விடத்தால்—எம்பெருமானார்க்கு க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யத்வம் விவக்ஷிதம். ... ...

ஆளவந்தார் அருளிச்செய்தது.

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுலாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥

மாதா, பிதா, யுவதய:—தாயும், தமப்பனும், ஸ்த்ரீகளும்,

தநயா:, விபூதி:—பிள்ளைகளும், ஐச்வர்யமும்

ஸர்வம்—(மற்றுமுள்ள) ஸகலபதார்த்தங்களும்

மதந்வயாநாம்—நான் பிறந்தவம்சத்தில் பிறந்தவர்களுக்கு

நியமேந யதேவ—நியதமாக எந்தத்திருவடியிணையே ஆகின்றதோ,
ந: ஆத்யஸ்ய குலபதே:—நம்குலகூடஸ்தரான நம்மாழ்வாருடைய
வகுளாபிராமம்—மகிழ்மாலையாலே அலங்க்ருதமாய்
ஸ்ரீமத்—வைஷ்ணவஸ்ரீயோடே நித்யஸம்யுக்தமாயிருந்துள்ள
தத் அங்க்ரியுகளம்—அந்தத் திருவடியிணையை
மூர்த்நா ப்ரணமாமி—(என்) தலையினால் ஸேவியாகின்றேன்.

குறிப்பு:—இது ஆளவந்தாரருளிச்செய்த ஸ்தோத்ரரத்நத்தில் ஐந்தாம் ச்லோகம். "சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத்தாய்தந்தையுமவரேயினியாவாரே" என்று ஆழ்வார் எம்பெருமான் விஷயத்தில் அநுஸந்தித்தருளின பாசுரத்தை, இவர் ஆழ்வார் விஷயத்திலே அநுஸந்திக்கிறார்.—"ப்ரபந்நஜநகூடஸ்தம் ப்ரபத்யே ஸ்ரீவராங்குஶம்" என்றத்தை ஸ்மரிப்பது. ... ...

ஸ்ரீபராசர பட்டரருளிச்செய்தது.

பூதம் ஸரஶ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் ।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ॥

பூதம்—பூதத்தாழ்வாரையும்

ஸரஶ்ச, மஹதாஹ்வய, பட்டநாத, ஸ்ரீபக்திஸார, குலசேகர, யோகிவாஹாந் } பொய்கையாழ்வாரையும், பேயாழ்வாரையும், பெரியாழ்வாரையும், திருமழிசையாழ்வாரையும், குலசேகராழ்வாரையும், திருப்பாணாழ்வாரையும்,

பக்தாங்க்ரிரேணு, பரகால, யதீந்த்ரமிஶ்ராந் } தொண்டரடிப்பொடியாழ்வாரையும், திருமங்கையாழ்வாரையும், எம்பெருமானாரையும்,

ஸ்ரீமத்பராங்குஶமுநிம்—நம்மாழ்வாரையும்
நித்யம் ப்ரணதோஸ்மி—நாடோறும் ஸேவியாநின்றேன்.

குறிப்பு:—'ஸரஶ்ச' என்றும், 'ஸரோஜ' என்றும், 'ஸரஸ்ய' என்றும் மூன்றுவகைப்பாடங்கள் வழங்குகின்றன.

பொதுத் தனியன்களின் உரை முற்றிற்று.



பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழிகளின் தனியன்கள்.

நாதமுனிகள் அருளிச்செய்தது.

𑌗𑍁𑌰𑍁𑌮𑍁𑌖𑌮𑌨𑌧𑍀𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌵𑍇𑌦𑌾𑌨𑌶𑍇𑌷𑌾𑌨𑍍
𑌨𑌰𑌪𑌤𑌿𑌪𑌰𑌿𑌕𑍢𑌪𑍍𑌤𑌂 𑌶𑍁𑌲𑍍𑌕𑌮𑌾𑌦𑌾𑌤𑍁𑌕𑌾𑌮𑌃 ।
𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌮𑌮𑌰𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌂 𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍
𑌦𑍍𑌵𑌿𑌜𑌕𑍁𑌲𑌤𑌿𑌲𑌕𑌂 𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

𑌯𑌃—யாவரொரு பெரியாழ்வார்
𑌨𑌰𑌪𑌤𑌿𑌪𑌰𑌿𑌕𑍢𑌪𑍍𑌤𑌂—ஸ்ரீவல்லபதேவனென்றராஜாவால்ஏற்படுத்தப்பட்ட
𑌶𑍁𑌲𑍍𑌕𑌂—வித்யாசுல்கத்தை
𑌆𑌦𑌾𑌤𑍁𑌕𑌾𑌮𑌃—கைப்பற்ற ஆசைகொண்டவராய்
𑌗𑍁𑌰𑍁𑌮𑍁𑌖𑌮𑌨𑌧𑍀𑌤𑍍𑌯—ஆசார்யமுகத்தால் அப்யஸியாமலே
𑌅𑌶𑍇𑌷𑌾𑌨𑍍 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌹—ஸமஸ்தமான வேதங்களை உரைத்தாரோ,
𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑌸𑍍𑌯—அழகியமணவாளனுக்கு

ஸாக்ஷாத் ஶ்வஶுரம்—நேரான மாமனாரும்
அமரவந்த்யம்—தேவதைகளால் தொழத்தக்கவரும்
த்விஜகுலதிலகம்—ப்ராஹ்மணவம்சத்துக்குத் திலகம் போன்றவருமாகிய
தம் விஷ்ணுசித்தம் நமாமி—அந்தப் பெரியாழ்வாரை வணங்குகிறேன்.

பாண்டியபட்டர் அருளிச்செய்தது.

(இருவிகற்ப நேரிசைவெண்பா.)

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோங் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பதவுரை.

மின் ஆர்—"ஒளி நிறைந்த,
தட—பரப்பும் உயர்த்தோங்குகையுமுள்ள
மதிள்—திருமதிலாலே
சூழ்—சூழப்பட்ட [ன்று
வில்லிபுத்தூர் என்று—ஸ்ரீவில்லிபுத்தூர்" எ
ஒருகால்சொன்னார்—ஒருதரம் உச்சரித்த
[வருடைய
கழல் கமலம்—திருவடித்தாமரைகளை
சூடினோம்—சிரமேற்கொண்டோம்;
முன்னாள்—"புருஷார்த்தம் வெளியாகாத
[காலத்தில்
கிழி—பொருள்முடிப்பை
அறுத்தான் என்று—அறுத்தருளினவர்"
[என்று
உரைத்தோம்—சொல்லப்பெற்றோம்;
நெஞ்சமே—ஓ! நெஞ்சே!
வந்து—நீ அநுகூலமாய் வரப்பெற்று
கீழ்மையினில்—அதோகதியாகிற நரகத்
சேரும்—சேருகைக்குடலான [தில்
வழி—வழியை
அறுத்தோம்—அறப்பண்ணினோம்.

குறிப்பு:— விஷயாந்தரங்களில் செல்லாது ஆழ்வார்பக்கலிலே செல்லப்பெற்றமைக்கு மனமகிழ்ந்து 'நெஞ்சமே' என்று கொண்டாடுகிறபடி. மதிள்-மதில், போலி. 'கீழ்மை இனிச்சேரும்' என்றும், 'கீழ்மேனிசேரும்' என்றும், 'கீழ்மையினிற் சேரும்' என்றும் மூன்று பாடங்கள் உண்டு. வந்து-வர என்றபடி, எச்சத்திரிபு.

(இதுவும் அங்ஙனமே.)

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

பாண்டியன்—வல்லபதேவ னென்கிற பா
[ண்டிய ராஜன்
கொண்டாட—ப்ரசம்ஸிக்க,
பட்டர்பிரான்—" ப்ராஹ்மணர்களுக்கு
[உபகாரகரான பெரியாழ்வார்
வந்தான் என்று—எழுந்தருளினார்" என்று
ஈண்டிய—திரள்திரளான
சங்கம்—சங்குகளை
எடுத்து—கையில் கொண்டு
ஊத—(பலர்) ஊத,
வேண்டிய—(விஷ்ணுபாரம்யஸ்தாபநத்தி
[க்கு) ஆவச்யகங்களான

வேதங்கள்–வேதவாக்யங்களை
ஓதி–உபந்யஸித்து
விரைந்து–விளம்பியாமல் [த்வரித்து]
கிழி–வித்யாசுல்கமாகவைத்த பொருள் [முடிப்பை

அமுத்தான்–அமுத்தருளின பெரியாழ் [வாருடைய
பாதங்கள்–திருவடிகளானவை
யாமுடைய–நமக்கு
பற்று–சரண்யம்.

குறிப்பு:—"ஈண்டிய"—ஈட்டம்—திரள். "சங்கம் மடுத்தூத" "சங்கம் அடுத்தூத" "சங்கம் எடுத்து ஓத" என்னும் பாடங்களுண்டு. "சங்கம்" என்று—வித்வத்ஸமூஹத்தைச்சொல்லிற்றாய், "எடுத்து ஓத" என்று—ஒரோவிடங்களில் அந்யபரங்களாய்க்கிடந்த வேதவாக்யங்களை ஸ்வமதஸாதகங்களாக எடுத்து ஓதினவளவிலே என்றபடி. சங்கம்—ஸங்கம்; ஸம்஘ம். மடுத்து—வாயிலே வைத்து. அடுத்து—கிட்டி. "எடுத்து[தோ]த" என்கிற பாடமொன்றுமே மோனைக்குச் சேரும். "யாம் உடைய" என்று பிரித்து, 'நாம் ஆச்ரயமாகவுடைய' என்றலுமொன்று.

ஸ்ரீ

சூடிக்கொடுத்த நாய்ச்சியார் அருளிச்செய்த

திருப்பாவையின்

தனியன்கள்.

பட்டர் அருளிச்செய்தது.

ஶ்லோ ॥ நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ ।
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய: ॥

பதவுரை.

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தம்	நப்பின்னைப் பிராட்டியினது உயர்ந்த திருமுலைத் தடங்களாகிற மலைச்சாரலில் கண்வளர்ந்தருளுமவனும்,
ஸ்வோச்சிஷ்டாயாம்	—தன்னால் சூடிக் களையப்பட்ட
ஸ்ரஜி	—மாலையிலே
நிகளிதம்	—விலங்கிடப்பட்ட வனுமான
க்ருஷ்ணம்	—கண்ணபிரானை
உத்போத்ய	—திருப்பள்ளி யுணர்த்தி
ச்ருதிசதசிரஸ்ஸித்தம்	பற்பல வேதங்களின் தலையான பாகங்களாலே தேறின [-வேதாந்த ஸித்தமான]
ஸ்வம்	—தன்னுடையதான
பாரார்த்யம்	—பாரதந்திரியத்தை
அத்யாபயந்தீ	—அறிவியா நின்றவளாய்
பலாத்க்ருத்ய	—பலாத்காரம் செய்து
யா கோதா	—யாவளொரு ஆண்டாள்
புங்க்தே	—(அக்கண்ணபிரானை) அநுபவிக்கிறாளோ
தஸ்யை	—அப்படிப்பட்ட பெருமையை யுடையளான ஆண்டாளின் பொருட்டு
பூய ஏவ பூய:	—காலதத்துவ முள்ளதனையும்
இதமிதம் நம:	—இந்த இந்த நமஸ்காரமானது
அஸ்து	—ஆயிடுக.

கருத்து:—நப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத் தடங்களில் தலைசாய்த்துக் கண்வளர்ந்தருளாநின்ற கண்ணபிரானைத் திருப்பள்ளியுணர்த்தி, அடிமைசெய்யும்

விஷயத்தில் தனக்குள்ள ஆவலை அறிவித்துத் தன்குழலிற் சூட்டிய பூமாலையாலே அப்பிரானை விலங்கிட்டு அநுபவித்த ஆண்டாளைத் திருவடி தொழுகின்றேன் என்றவாறு.

நீளா—நப்பின்னை ; 'பின்னை' என்றும் பெயர் ; ந என்பது சிறப்புக் குறிப்பு: '**நக்கீரன்**' என்ற விடத்திற்போல. இவள் கண்ணபிரானது மனைவியரில் தலைமையுடையவள் ; கும்பனென்னும் இடையர் தலைவனது மகள். இவளை மணஞ் செய்துகொள்ளுதற்காக, இவள் தந்தை கந்பாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்கும் அடங்காத அஸுரா வேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழு திருவுருக் கொண்டு சென்று வலியடக்கித் தழுவினனென்று புராணங் கூறும். இவள் திருமாலின் தேவியருள் நீளா தேவியின் அம்ச மெனப்படுதலால், இங்கு இவளை '**நீளா**' என்ற சொல்லாற் குறித்தனர். "குத்துவிளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல், மெத்தென்ற பஞ்ச சயனத்தின்மேலேறிக், கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல், வைத்துக்கிடந்தமலர் மார்பா!" என்றருளிச் செய்ததற்கு இயைய "**நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தம்**" எனப்பட்டது. பஹுகுடும்பிகளா யிருப்பவர்கள் ஒரு மலையடியைப் பற்றி ஜீவிப்பதுபோல் ஸர்வலோக குடும்பியான ஸர்வேச்வரன் நப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத் தடத்தைப் பற்றிக் கிடக்கிறபடி. "நிறைவினால் குறைவில்லா நெடும்பணைத்தோள் மடப்பின்னை, பொறையினால் முலையணைவான் பொருவிடை யேழடர்த்துகந்த" என்றதனால், இவள் முலையோடு அணைவதற்கென்றே கண்ணபிரான் எழ்விடை யடங்கச் செற்றன னென்க.

"உம்பர் கோமானே! உறங்காதெழுந்திராய்" "செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும் விமலா துயிலெழாய்" என்றிவை முதலான பாசுரங்களாலே ஆண்டாள் கண்ணபிரானைத் திருப்பள்ளி யுணர்த்தினமையால், 'உத்போத்ய' எனப்பட்டது. இப்படி திருப்பள்ளி யுணர்த்தியதற்குப் பிரயோஜனம் இன்னதென்பதைக் கூறுவது, இரண்டாம் பாதம். "உன் பொற்றாமரையடியேபோற்றும் பொருள் கேளாய்" என்று எம்பெருமானை அபிமுகனாக்கி, "உன்றன்னோடுற்றோமே யாவோம் **உனக்கே நாமாட்செய்வோம்**" என்றருளிச் செய்ததைக் கூறியவாறு. **பாரார்த்யம்** ஆவது—பரம புருஷனுக்கே உரிமைப்பட்டிருக்குந் தன்மை. "தனக்கேயாக எனைக்கொள்ளு மீதே" இத்தியாதி அருளிச் செயல்களை அநுஸந்திக்க. **ஸ்வம்** என்று தநத்திற்கும் பெயராதலால், 'ஆத்துமாவுக்கு ஸ்வமான பாரதந்திரியத்தை' என்று உரைப்பதும் சிறக்கும். "யஸ்யாஸ்மி ந தமந்தரேமி" "பதிம் விஶ்வஸ்ய" என்றிவை போன்ற பல்லாயிரம் வேதவாக்கியங்களில் ஆத்துமாவினது பாரதந்திரியம் முறையிடப் பட்டுள்ளதனால், "ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்தம்" எனப்பட்டது. ஸர்வேச்வரன், 'தனது சேஷித்வத்தையும் ஆத்துமாக்களின் சேஷத்வத்தையும் பலமுகமாக இவ்வுலகில் எடுத்து உபதேசித்தாலும் "அஹம்மே—நான் எனக்கே உரியன்" என்று இறுமாந்து மார்வைத் தட்டும்படியான இவ்விபூதியில் அருமையாக அவதரித்த இவ்வாண்டாள் தனது சேஷத்வத்தைத் தானே சென்று எம்பெருமான் ஸந்நிதியில் ஓதினதின் சீர்மை

தோன்ற, அத்யாபயந்தீ என்கிறது. எம்பெருமானை நோக்கி, 'பிரானே! நீ எனக்கு ஸ்வாமி, நான் உனக்கு ஸ்வம், என்பதை நன்றாக உணர்ந்து கொள்' என்று உணர்த்துவளென்க.

இப்படி ஸர்வஜ்ஞனை எம்பெருமானையும் உணர்த்துகைக் கீடாக ஆண்டாளுக் குள்ளதொரு மேன்மையைக் கூறுகின்றது, மூன்றாம்பாதம். களிறுபோலச் செருக்கித் திரியுமவனை கண்ணபிரானை, தான் சூடிக் களைந்த மாலையாகிற விலங்கிற் படுத்தி, வேறிடந்தேடி ஓடவொண்ணாதபடி வளைத்து அணைத்து அநுபவித்தவாறு கூறுகின்றது. "நியமித ஸ்வமௌளிவிதாத்ரீ" [கோதாஸ்துதி-௫.] என்ற தேசிகஸூக்தி இங்கு ஸ்மரிக்கத் தக்கது. (சூடிக்கொடுத்த வரலாற்றின் விவரம் இவளது வைபவத்திற் கூறப்பட்டது.) "அத்யாபயந்தீ" என்று * பாமாலை பாடிக் கொடுத்தபடியும், "ஸ்ருஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே" என்று * பூமாலை சூடிக்கொடுத்த படியுஞ் சொல்லிற்றாகிறதென்று ரஸோக்தி காணக.

"கோதா" என்று ஆண்டாளுடைய திருநாமம். தென்மொழியில் "**கோதை**" என வழங்கும். **கோதை**-மாலை; மாலைபோலே மிகவும் **இனியளா**யிருப்பவள் என்றபடி. வடமொழியில், 'கோதா' என்றசொல்-ஸ்ரீஸூக்திகளைத் தந்தருளியவள் என்று பொருள்படும். அச்சொல்லே தமிழில் கோதையெனத் திரிந்த தென்றலுங் கொள்ளற்பாலதே.

ஆண்டாள் "எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோடுற்றோமேயாவோ முனக்கே நாமாட் செய்வோம்". என்று எம்பெருமான் விஷயத்தில் ப்ரார்த்தித்த பேறு இந்தச்லோகத்தில் ஆண்டாள் விஷயத்தில் ப்ரார்த்திக்கப்படுகின்றது, "தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய:" என்று.

(உய்யக்கொண்டார் அருளிச்செய்தது.)

இருவிகற்ப நேரிசை வெண்பா.

அன்ன வயற்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையாற்
பாடிக் கொடுத்தாணற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

பதவுரை.

அன்னம் வயல்—ஹம்ஸங்கள் (உலாவுகின்ற) வயல்களையுடைய
புதுவை—ஸ்ரீ வில்லிபுத்தூரில் (திருவவதரித்த)
ஆண்டாள்—'ஆண்டாள்' என்னுந் திருநாமத்தை யுடையளும்,
பன்னு—ஆராய்ந்து அருளிச்செய்யப்பட்ட
திருப்பாவை பல் பதியம்—திருப்பாவையென்னும் பலபாசுரங்களை
இன் இசையால்—இனிய இசையுடன்
பாடி—பாடி (அவற்றை)
அரங்கற்கு—ஸ்ரீ ரங்கநாதனுக்கு
நல் பா மாலை—விலக்ஷணமான பாமாலையாக
கொடுத்தாள்—ஸமர்ப்பித்தவளும்,
பூ மாலை—(செண்பகம் முதலிய) பூக்களினாலாகிய மாலையை
சூடி—(தான் முந்துறக் குழலிற்) சூடி
கொடுத்தாளை—(பிறகு ரங்கநாதனுக்கு) ஸமர்ப்பித்தவளுமான கோதையை
சொல்—அநுஸந்திக்கக் கடவை.

குறிப்புரை:—ஆண்டாள் அருளிச்செய்த திவ்யப் பிரபந்தங்களை ஓதுவதிற்காட்டிலும் அவ்வாண்டாள்தன்னுடைய திருநாம ஸங்கீர்த்தனமே முக்கியமென்பது இப்பாட்டின் கருத்தாம்.

ஆண்டாளுடைய நடையழகைக் கற்றுக்கொள்வதற்காகப் பல அன்னப்பறவைகள் ஸ்ரீ வில்லிபுத்தூரைச்சேர்ந்த வயல்களிற் குடியிருந்தனவாதலால், **அன்ன வயற்புதுவை** என்றார். **புதுவை**—பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டினுள் ஒன்று; இத்திருப்பதிக்கு வடமொழியில் "யதிநவ்யபுரம்" எனப் பெயர்வழங்கும். "**ஆண்டாள்**" என்னுந் திருநாமம்—அனைத்துலகத்துக்கும் அன்னையாய் அவற்றை ஆண்டுவருகின்ற இலக்குமியின் அவதார விசேஷமென்ற காரணத்தினாற் போந்ததென்ப. அன்றி, **ஆழ்ந்தாள்** என்னுஞ்சொல் ஆண்டாளென மருவிற்றென்பர் சிலர். (எம்பெருமானது குணங்கள் முதலியவற்றில் ஆழ்ந்தாள் என்றபடி.)

ஆண்டாள் திருப்பாவை பாடித்தந்தது கண்ணபிரானுக்காயிருக்க, 'அரங்கற்குக் கொடுத்தா'ளென்றது பொருந்துமாறு என்? எனின்; "கண்ணாலங்கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான், திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து, அண்ணாந்திருக்கவே யாங்கவளைக் கைப்பிடித்த, பெண்ணாளன் பேணுமூர் பேருமரங்கமே" [நாச்சியார் திருமொழி, கக-கூ.] என்பது முதலிய பாசுரங்களினால் தர்மியின் ஒற்றுமை கூறப்பட்டமையால் விரோத மில்லையென உணர்க. "கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்......அண்டர்கோனணியரங்கன்" என்றார் திருப்பாணாழ்வாரும். **பன்னு திருப்பாவை**—சொற் செறிவு, பொருட்பொலிவு முதலியவற்றால் அனைவராலும் ஆராய்ந்து அநுஸந்திக்கப்படுந் திருப்பாவை யென்றலுமொன்று. **பல் பதியம்**—பல பாசுரங்கள்; "பத்யம்" என்ற வடசொல் **பதிய**மெனத் திரிந்தது. "பல்பதிகம்" என்ற பாடம் பொருத்தமற்றதேயாம்.

ஆண்டாள் எம்பெருமானுக்கு இரண்டு மாலைகளை ஈந்தனள்; ஒன்று பாக்களினாலாகியது; (பா-பாசுரம்.) மற்றொன்று பூக்களினாலாகியது. ஒன்றைப் பாடித் தந்தாள்; ஒன்றைச் சூடித்தந்தாள். பாமாலையிற் சந்தம் பொலியும்; பூமாலையிற் கந்தம் பொலியும் என்று ரஸோக்தி விரிக்க.

சொல் என்று—தமது வாக்கரணத்தை முன்னிலைப்படுத்திக் கூறியவாறு. திருவடிபணிந்தோனைக் குறித்துக் கூறியவாறுமாம். "சூடிக் கொடுத்தாளை" என்றவிடத்துள்ள இரண்டனுருபை "ஆண்டாள்," "பாடிக்கொடுத்தாள்" என்பவற்றோடுங் கூட்டுக. "பாடிக் கொடுத்தாணற் பாமாலை" என்ற அத்தியாபக பாடத்தில் தனைபிறழுமாறு காண்க......................................(*)

(இதுவும் அங்ஙனமே.)

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

பதவுரை.

சூடி கொடுத்த—(பூமாலையைத் திருக்குழலிற்) சூடி, (அதனை எம்பெருமானுக்கு) ஸமர்ப்பித்த

சுடர் கொடியே—தேஜோமயமான கொடிபோன்றவளே!
தொல் பாவை—அநாதி ஆசாரஸித்தமான நோன்பை
பாடி—(திருப்பாவை முகமாகக்) கூறி
அருள வல்ல—(அடியார்திறத்துக்) கருணைபுரிய வல்லவளும்
பல் வளையாய்—பல வளைகளை அணிந்துள்ளவளுமான கோதாய்!
நீ—நீ
நாடி—(மன்மதனை) நாடி

என்னை வேங்கடவற்கு விதி என்ற இ மாற்றம்	("காமதேவா! நீ) என்னைத் திருவேங்கடமுடையானுக்கு வாழ்க்கைப்படுத்தவேணும்" என்று (காமனைக்குறித்துக்) கூறிய கூற்றை

நாம் கடவா வண்ணம்—யாம் மீறுதொழியுமாறு

நல்கு—அருள்புரிவாயாக.

குறிப்புரை:—இப்பாட்டால், நாச்சியார்திருமொழியில் மிக்க அன்பு எமக்குப் பிறக்கவேணுமெனப் பிரார்த்தித்தவாறு. அதில் முதற்றிருப்பதிகத்தில், "அனங்கதேவா!, உய்யவுமாங்கொலோ வென்று சொல்லியுன்னையு மும்பியையுந் தொழுதேன், வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே" இத்தியாதி பாசுரங்களினால், ஆண்டாள் காமனை வணங்கி, "வேங்கடவாணனுக்கு நான் வாழ்க்கைப்படுமாறு நீ விதிக்கவேணும்" என வேண்டினமை அறிக.

"மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்றபடி தேவதாந்தரஸமாச்ரயணத்தை விலக்கவேண்டுங் குடியிற்பிறந்த ஆண்டாள் ஸ்வரூபவிருத்தமாகக் காமன்காலில் விழுந்தனளாதலால் ப்ரபந்நகுல மரியாதை வழுவாது ஒழுகுபவர்கட்கு இவளுடைய வாய்மொழிகள் பேணிக்கற்கைக்கு உரியனவல்லவென ஆபாதவுணர்ச்சியாக விபரீதஞானம்பிறந்து, அதனால் இவ்வாண்டாளது அருளிச்செயல்களை இழக்கும்படியான கெடுதிவிளைவது இவ்விருள்தருமாஞாலவியற்கைக்கு இணங்கியதொன்றாகையால், அவ்வகைக்கெடுதி நேராதொழிய வேணுமென்று பிரார்த்திக்கின்றாரென்பது உய்த்துணரற்பாலது.

"சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" என்று ஆண்டாளுக்கு நிரூபகம்போலும். கொடியானது ஒரு கொள்கொம்புடனணைந்தன்றித் தரித்து நிற்கமாட்டாதவாறுபோல, இவ்வாண்டாளும் * வாஸுதேவதருவை அணைந்தன்றித் தரிக்கிலாளாதலால் கொடியாகக் கூறப்பட்டனள். **கோடி**—முற்றுவமை. **சுடர்க் கோடி**—"ஹாஷ்ரேண வ்ராஜாயயா" என்றாற்போல, ஆண்டாள் * அச்யுதபாநுவை அகலாத அஞ்சுடராதல் அறிக.

தோல் பாவை—'வடமொழி வேதம்போல் அநாதியான திருப்பாவை' என்றும் பொருள்கூறத்தகும்; "வேதமனைத்துக்கும் வித்தாகுங் கோதை தமிழ் ஐயைந்து மைந்தும்" என்றதை நினைக்க. "வேங்கடவற் கென்னைவிதி யென்ற விம்மாற்றம்"—"வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே" என்ற நாச்சியார் திருமொழியில் நோக்கு. **மாற்றம்** - வாய்மொழி; அதனைக் கடவாதொழிதலாவது—விரும்பி அநுஸந்திக்கையேயாம். நல்குதல் - கொடுத்தல்; இங்கு அருள்கொடுத்தலைக் குறித்தவாறும்.

ஆண்டாளுக்குத் திருவேங்கடமுடையான் திறத்து எவ்வாறான காதல் கிளர்ந்ததோ, அவ்வாறான காதல் தமக்குப் பிறக்கவேணுமென்பது இதனால் பிரார்த்திக்கப் படுகின்றதெனக் கருத்துரைப்பாருமுளர்.............................

தனியன் உரை முற்றுப்பெற்றது.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.



சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

நாச்சியார் திருமொழியின் தனியன் உரை.

திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச்செய்த தனியன்.

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

அல்லிநாட் டாமரைமே லாரணங்கி னின்றுணைவி
மல்லிநாடாண்ட மடமயில் — மெல்லியலாள்
ஆயர் குலவேந்த ஞகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

பதவுரை.

அல்லி நாள் தாமரை மேல்	இதழ்களையுடைய அப்போதலர்ந்த தாமரைப் பூவில்	ஆயர் குலம் வேந்தன்	இடைக்குலத்திற்குத் தலைவனான கண்ணபிரானுடைய
ஆர்	பொருந்தியிராநின்ற	ஆகத்தாள்	திருமேனியிற் பொருத்தமுடையளாயும்
அணங்கின்	தெய்வப் பெண்ணான பெரியபிராட்டியார்க்கு	தென் புதுவை வேயர்	அழகிய ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு (த்தலைவராய்) [வேயர்குலத்துதித்தவரான பெரியாழ்வாராலே]
இன் துணைவி	இஷ்டஸகியாயும்,	பயந்த	பெறப்பட்ட
மல்லிநாடு	திருமல்லிநாட்டை	விளக்கு	விளக்காயிராநின்றுள்
ஆண்ட	(குணத்தாலே ஈடுபடுத்தி) ஆளாநின்ற		
மடமயில்	அழகிய மயில்போன்றவளாயும்		
மெல் இயலாள்	மென்மைத்தன்மையுடையளாயிருக்கின்ற ஆண்டாள்		

இத்தனியனில், ஆண்டாளுடைய ஐச்வர்யம், ஆபிஜாத்யம், குணங்கள், வைபவங்கள் கூறப்படுகின்றன. ஆண்டாள் பெரியபிராட்டியார்க்கு ஸஹோதரி என்கிறது—முதலடி. "மண்மகளும் திருவும் நிழற்போல்வனர்" என்ற திருவிருத்தமும், "[illegible]" என்ற ஸ்ரீரங்கராஜ

ஸ்தலமும் அறியத்தக்கன. பூமிப்பிராட்டியின் அம்சமாகவன்றோ ஆண்டாள் கூறப்படுவது.

மல்லிநாடு — ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு அடுத்த நாடு. அதனை ஆண்டாள் ஆளுகையாவது — அங்குள்ளாரைத் தனது குணங்களால் தன்னிடத்து ஈடுபடுத்துகை.

மடமயில்—மயில் ஒருவருடைய அபிமானத்தில் ஒதுங்கி வளருவதுபோல ஆண்டாள் "விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே" என்னும்படி பெரியாழ்வாருடைய அபிமானத்தில் வளர்ந்தமையால் மயிலாகக் கூறப்பட்டனளென்க. முற்றுவமம்.

மெல்லியலாள் — "செஞ்சுடர்மேற் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒருநாள், தங்குமேல் என் ஆவி தங்கும்" என்னும்படி க்ஷணகாலமும் பிரிவைப் பொறுக்கமாட்டாத ஸௌகுமார்யமுடையளென்கை.

ஆயர்குலவேந்தனாகத்தாள் — கீழ்ச்சொன்ன ஸௌகுமார்யத்தாற் பிரிவாற்றமாட்டாமல், "என்னாகத்திளங்கொங்கை விரும்பித்தான் நாடோறும், பொன்னாகம் புல்குதற்கென் புரிவுடைமை செப்புமினே" என்னும்படி கண்ணபிரானுடைய திருமேனியிற் பொருந்தமுற்றிருக்குமவளென்கை.

இனி, ஆபிஜாத்யத்தாலும் இவள் கண்ணபிரானுக்கு ஏற்றவளென்கிறது கடையடியால். * ஆயர்குலத்தினிற்றோன்றுமணிவிளக்குக்கு, * வேயர்பயந்த விளக்கு அநுரூபமாயிருக்குமென்க. வேயர் — * வேயர்தங்கள் குலத்துதித்த விட்டுசித்தன்' என்றபடி. திருவரங்கத்தமுதனாருடைய குடி 'மூங்கிற்குடி' எனப்படுவதுபோல், பெரியாழ்வார் குடி 'வேயர்குடி.' எனப்படுமென்ப. .... (*)

(மற்றொரு தனியன்.)

(கட்டளைக் கலித்துறை.)

கோலச்சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும்
சீலத்தினள் தென்திருமல்லிநாடி செழுங்குழல்மேல்
மாலைத்தொடை தென்னரங்கருக் கீயு மதிப்புடைய
சோலைக்கிளியவள் தூயநற்பாதந் துணைநமக்கே.

கோலம் கரி சங்கை — அழகையும் சுரியையு முடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை நோக்கி
மாயன் — கண்ணபிரானுடைய
செம் வாயின் குணம் — சிவந்த திருவதரத்தின் அதிசயத்தை
வினவும் சீலத்தினள் — கேட்குந்தன்மை யுடையவளும்
தென் — தென்திசையிலுள்ள
திருமல்லி நாடி — திருமல்லிநாட்டிற்குத் தலைவியும்
செழும் — செழுமைதங்கிய
குழல் மேல் — (தனது) திருக்குழற்கற்றையில் சூட்டப்பெற்ற
மாலைத்தொடை — கலம்பகன் மாலையை
தென் அரங்கருக்கு — அழகிய மணவாளனுக்கு

ஈயும் மதிப்பு உடைய	ஸமர்ப்பிக்கும்படியான மேன்மையுடையவளும்	தூய நல் பாதம்	பாவநமும்போக்யமுமான திருவடிகள்
சோலை கிளி அவள்	சோலையில் வளருங்கிளி போல் இனியமொழியை யுடையளுமான அவ்வாண்டாளுடைய	நமக்கு	நமக்கு
		துணை	தஞ்சம்.
			(ஏ-ஈற்றசை)

இத்தனியன் பல திருப்பதிகளில் வழங்கப்பெறுவதில்லை. நாச்சியார் திருமொழியில் ஏழாந் திருமொழியாகிய "கருப்பூரம் நாறுமோ" என்னுந் திருமொழியிலுள்ள அர்த்தம் இதில் முதலடியிற் கூறப்பெற்றது. கண்ணபிரான், தனது திருப்பவளத்தில் வைத்து ஊதும் ஸ்ரீ பாஞ்சஜந்யத்தை நோக்கி, 'சங்கே! எம்பெருமானுடைய திருப்பவளச் செவ்வாய் கருப்பூரம்போல் நாறுமோ? அல்லது கமலப்பூப்போல் நாறுமோ? சொல்லாய்' என்று அதன் குணத்தை வினவுகின்றமை உணரத்தக்கது.

பெரியாழ்வார், ஆண்டாளுக்குச் "சூடிக்கொடுத்த நாச்சியார்" என்று பெயரிட்டதற்கு அடியான ஐதிஹ்யங் கூறப்படுகின்றது, "செழுங்குழல்மேல்" என்று தொடங்கி.

அவ்வரலாறு வருமாறு — ஆண்டாள் இளமைதொடங்கி எம்பெருமானிடத்திலே பக்திப்பெருங்காதல் கொண்டு அப்பெருமானையே தான் மணஞ்செய்துகொள்ளக்கருதி, தனது தந்தையரான பெரியாழ்வார் வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தும் பொருட்டுக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாத ஸமயம்பார்த்து எடுத்துத் தன் கூந்தலில் தரித்துக்கொண்டு, 'அப்பெருமானுக்கு நான் நேரொத்திருக்கின்றேனோ இல்லையோ?' என்று தன் செயற்கையழகைக் கண்ணாடியிலே கண்டு தந்தையார் வருவதற்குமுன் அம்மலர் மாலையைக் களைந்து முன்போலவே நலங்காமல் வைத்துவந்தாள்; இச்செய்தியை உணராமல் ஆழ்வார் அம்மாலையைக் கொண்டுபோய் ஸ்வாமிக்குச் சாத்திவர, பெருமானும் ப்ரீதியோடு ஏற்றருளினான்; இங்ஙனம் பலநாள் கழிந்தபின் ஒருநாள், வெளியிற்சென்ற ஆழ்வார் விரைவில்மீண்டு வந்தபொழுது, பூமாலையைத் தமது மகள் சூடி இருப்பதைப்பார்த்து, கோபித்து அவளைக் கண்டித்துப் புத்திசொல்லிவிட்டு, அன்று எம்பெருமானுக்கு மாலைசாத்தாமல் நின்றார்; அன்றையிரவில் திருமால் ஆழ்வாரது கனவில் தோன்றி 'உமது மகள் சூடிக்கொடுத்தமாலையே நமது உள்ளத்திற்கு மிகவும் உகப்பாவது' என்று அருளிச்செய்ய, அதனால் ஆழ்வார் தம் மகளைத் திருமகளென்றே கருதி, யாவர்க்குந் தலைவியென்ற காரணத்தால் 'ஆண்டாள்' என்றும், மலர்மாலையைத் தான் சூடிக்கொண்டபின்பு பெருமானுக்குக் கொடுத்ததனால் 'சூடிக் கொடுத்தாள்' என்றும் பெயரிட்டு வளர்த்து வந்தனரென்பதாம். "பாட்டுக்கு முந்துவிற் வில்லிபுத்தூர் வரும் பாவைசூழற், சூட்டுக்கு நல்லமர் தென்னரங்கர்" என்பது திருவரங்கத்து மாலை. .... (*)

தனியன் உரை முற்றிற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பெருமாள் திருமொழித் தனியன் உரை.

இன்னமுதமூட்டுகேனிங்கேவாபைங்கிளியே! தென்னரங்கம்பாடவல்லசீர்ப்பெருமாள்-பொன்னஞ்
சிலைசேர்நுதலியர்வேள்சேரலர்கோனெங்கள் குலசேகரனென்றேகூறு.

பைங் கிளியே	பசுமைதங்கிய கிளியே!
இன் அமுதம் ஊட்டுகேன்	(உனக்கு) இனிமையானதோர் அம்ருதம் உண்ணத்தருகிறேன்;
இங்கே வா	என்னருகே வருவாயாக;
தென் அரங்கம்	தென் திருவரங்கத்தைக் குறித்து
பாட வல்ல	(இனிய கவிகளை) அருளிச் செய்யவல்ல
சீர்	கல்யாண குணசாலியான
பெருமாள்	மஹாநுபாவர்—,
பொன் அம் சிலை சேர் நுதலியர் வேள்	விரும்பத்தக்கதாய் அழகியதான புருவத்தை நெற்றியிலே யுடைய மாதர்கட்கு மனோஹரரான—,
சேரலர் கோன்	சேரவம்சத்தவர்களுக்கெல்லாம் ராஜா—,
எங்கள் குலசேகரன்	ப்ரபந்நரான நம்முடைய குலத்துக்குச் சிரோபூஷணமான குலசேகராழ்வார்
என்றே கூறு	என்று இதையே நீ வாய்பிதற்ற வேணும்.

* * * ஸ்ரீராம பக்தரான குலசேகரப்பெருமாள் அவ்விராமபிரானது திருநாமங்களைக் கிளிக்குக் கற்பித்துவைத்து அதன் முகத்தினின்று அவற்றைக் கேட்க விரும்புமாபோலே, குலசேகர பக்தரானவர்கள் அக்குலசேகருடைய திருநாமங்களைக் கிளிக்குக் கற்பித்து அதன் முகமாகக்கேட்க விரும்புகிறபடி. "பொன்னஞ்சிலை சேர்" என்றவிடத்து, சிலை என்ற சொல்—வில் போன்ற புருவத்துக்கு வாசகமாதலால், உவமவாகு பெயர்.

ஆரங்கெட்டபரனன்பர்கொள்ளாரென்றவர்களுக்கே *
வாரங்கொடுகுடப்பாம்பிற்கையிட்டவன்—மாற்றலரை *
வீரங்கெடுத்தசெங்கோல்கொல்லிகாவலன் வில்லவர்கோன் *
சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே.

ஆரம் கெட	நவரத்தின மாலையொன்று கெட்டுப்போக,
	(அதனை ஸ்ரீவைஷ்ணவர்கள் களவு செய்ததாகக் கள்ள மந்திரிகள் கூற)
அவர்களுக்கே வாரம் கொடு	அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயத்திலே பக்ஷபாதம் பூண்டு
பரன் அன்பர் கொள்ளார் என்று	"பாகவதர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் களவு செய்யமாட்டார்கள்" என்று சொல்லி
குடப்பாம்பில் கை இட்டவன்	பாம்புக்குடத்தில் கையிட்டருளியவர்—
மாற்றலரை	சத்ருக்களை
வீரம் கெடுத்த செங்கோல்	பரிபவப்படுத்திய செங்கோன்மையை உடையவரும்
கொல்லி காவலன்	கொல்லி என்கிற நகருக்கு நிர்வாஹகரும்
வில்லவர் கோன்	தநுர்வித்யை பயின்றவர்களில் தலைவரும்
சேரன்	சேரதேசத்தரசரும்
முடி வேந்தர் சிகாமணி	முடியுடை மன்னர்களில் சிறந்தவருமான
குலசேகரன்	குலசேகராழ்வாராவர்.

* * * குலசேகராழ்வார்க்குள்ள ஸ்ரீவைஷ்ணவ பக்ஷபாதாதிசயத்தைக் கூறுவது இது. 'ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருபோதும் கெட்டகாரியஞ்செய்யார்' என்று குடப்பாம்பிற் கையிட்டு சபதம்பண்ணின வரலாறு சரித்திரத்தில் விசதம்.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

திருச்சந்தவிருத்தத்தின் தனியன்கள்.

தருச்சந்தப் பொழில்தழுவு தாரணியின் துயர்தீரத்
திருச்சந்த விருத்தஞ்செய் திருமழிசைப் பரன்வருமூர்
கருச்சந்துங் காரகிலுங் கமழ்கோங்கு மணநாறுந்
திருச்சந்தத் துடன்மருவு திருமழிசை வளம்பதியே.

தரு சந்தம் பொழில் தழுவு தாரணியின்	வ்ருக்ஷங்களினுடைய அழகையுடைய சோலைகளாலே சூழப்பட்ட பூமியிலே உள்ளவர்களுடைய	கரு சந்தும்	பெருமை பொருந்திய சந்தன மரங்களும்
துயர் தீர	துக்கம் தீரும்படியாக	கார் அகிலும்	கறுத்த அகிற்கட்டைகளும்
திருச்சந்த விருத்தம் செய்	'திருச்சந்த விருத்தம்' என்னும் திவ்யப்ரபந்தத்தைச் செய்தருளிய	கமழ் கோங்கும்	மணம்மிக்க கோங்குமரங்களும்
		மணம் நாறும்	பரிமளம் வீசப்பெற்றதாய்,
		திரு	பெரிய பிராட்டியார்
திருமழிசை பரன் வரும் ஊர்	திருமழிசைப்பிரான் திருவவதரித்த திவ்ய தேசம் எதுவென்றால்,	சந்தத்துடன்	அபிநிவேசத்தோடு
		மருவு	பொருந்திவாழப்பெற்றதான
		திரு மழிசை வளம் பதியே	திருமழிசை என்னும் செல்வம் மிக்க திருநகரியே யாம்.

எம்பெருமானைக்காட்டிலும் அவன் உகந்து எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளே பரமோத்தேச்யமென்னுமிடம் தோற்றக் "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லையென்று, மண்டினார் உய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே" என்றும் "விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்" என்றும் "திரு நறையூர் மணிமாடஞ் சேர்மின்களே" என்றும் "பதியே பரவித்தொழும் தொண்டர்தமக்குக்கதியே!" என்றும் அருளிச்செய்திருப்பதுபோல, ஆழ்வார்களைக் காட்டிலும் அவர்கள் திருவவதார ஸ்தலங்களே ப்ரபந்நர்க்குப் போற்றத்தக்கவை என்பதை விளக்குதற்காகத் திருமழிசையாழ்வார் பக்கலுள்ள பக்திப்ரகர்ஷத்தின் பரீவாஹமாக அவருடைய திருவவதார ஸ்தலத்தைப் புகழ்ந்து பேசுவது-இப்பாட்டு.

உலகு மழிசையு முள்ளுணர்ந்து தம்மிற் புலவர் புகழ்க்கோலால் தூக்க—உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே வைத்தெடுத்த பக்கம் வலிது.

புலவர்	ஸர்வஜ்ஞராகிய சதுர்முகர்,	புகழ் கோலால் தூக்க	துலாக்கோல் காட்டி நிறுப்பிக்க
உலகும்	(திருமழிசை தவிர மற்ற) எல்லா வுலகங்களையும்	உலகு தன்னை வைத்து எடுத்த பக்கத்தும்	உலகங்களை எல்லாம் வைத்து நிறுத்த தட்டிற்காட்டிலும்
மழிசையும்	திருமழிசையையும்		
தம்மில் உள் உணர்ந்து	(தனித்தனியே) தம்நெஞ்சில் ஆராய்ந்து (விச்வகர்மாவைக் கொண்டு)	மா நீர் மழிசை வைத்து எடுத்த பக்கமே வலிது	சிறந்த நீர்வளம் மிக்க திருமழிசையை வைத்து நிறுத்த தட்டே வலிமிக்கதாயிருந்தது (தாழ்ந்தது.)

ஸ்ரீ பக்திஸார முனிவரர் திருவவதரித்த திவ்ய க்ஷேத்ரமாகிய திருமழிசையின் அஸாதாரணமான ஏற்றம் இதனால் கூறப்படுகின்றது.

ஸ்ரீ:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருமாலையின்

தனியன்.

(திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்தது.)

(இருவிகற்பநேரிசை வெண்பா.)

மற்றொன்றும் வேண்டா மனமே! மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்—உற்ற
திருமாலை பாடுஞ்சீர்த் தொண்டரடிப் பொடியெம்
பெருமானை யெப்பொழுதும் பேசு.

பதவுரை.

மனமே	நெஞ்சே!
மற்று ஒன்றும்	வேறொன்றும்
வேண்டா	(உனக்கு விரும்ப) வேண்டியதில்லை;
மதின் அரங்கர்	ஸப்த ப்ராகாரங்களோடு கூடிய ஸ்ரீரங்கத்துக்குத் தலைவரான நம்பெருமாளுடைய
கன்று இனம் மேய்த்த	(கிருஷ்ணாவதாரத்தில்) கன்றுகளின் கூட்டங்களை மேய்த்தருளிய,
கழல் இணை கீழ்	இரண்டு திருவடிகளின் கீழே

உற்ற	ஸம்பந்தம் பெற்றிருக்கிற
திருமாலை	'திருமாலை' என்னும் திவ்யப்ரபந்தத்தை
பாடும்	பாடியருளின
சீர்	கல்யாணகுணங்களையுடைய
தொண்டரடிப்பொடி எம்பெருமானை	தொண்டரடிப்பொடியாழ்வாரை
எப்பொழுதும்	ஸர்வகாலமும்
பேசு	அநுஸந்திக்கக்கடவாய்.

நெஞ்சே! நீ உஜ்ஜீவிப்பதற்காக எம்பெருமானையாவது மற்றொரு புருஷார்த்தத்தையாவது பற்றவேண்டா; பாகவதர்கட்கு அடிமையையே நிரூபகமாகக் கொண்ட தொண்டரடிப்பொடியாழ்வாரது திருநாமத்தையே எப்போதும் அநுஸந்தித்திருப்பாயாகில் உனக்கொரு குறையுமில்லை. இவ்வாழ்வார் நம்பெருமான் திருமுடிக்குமாத்திரம் மாலை சூடினவரல்லர்; திருவடிகட்கும் திருமாலை ஸமர்ப்பித்தவர்; அவர் திருவடிகளை உனக்குத் தஞ்சமென்றபடி.

மதிளரங்கர் என்றதனால் ஏழு திருமதில்களுக்குள்ளே எழுந்தருளியிருப்பவரென்றால் அவர் நமக்குப் பெறுதற்கு அரியவரோ என்று சங்கைபிறக்க, கற்றினம் மேய்த்த இத்யாதியால் ஸௌலப்ய ஸௌசீல்யங்களைக் கூறுகிறபடி.

கன்று + இனம், கற்றினம்:

மூன்றுமடியில் வெண்டளை தவறுகின்றது; "திருமாலை பாடுஞ்சீர்த் தொண்டர்பொடியெம்" என்றாவது, "தொண்டரடித் தூளெம்" என்றாவது பாடமிருந்திருக்கும்; காலகதியில் மாறுபட ஓதப்பட்டு வருகின்றது என்பர்.

ப்ரதமபர்வமெனப்படும் பகவத்விஷயத்தைப் பற்றினவர்களுக்கு அர்த்தபகவானே எம்பெருமானாயிருப்பதுபோல, சரமபர்வமெனப்படும் பாகவதவிஷயத்தைப் பற்றினோர்க்கு இவ்வாழ்வார்தாமே எம்பெருமானார் என்பது தோன்ற தொண்டரடிப்பொடியெம்பெருமான் எனப்பட்டதென்க.

தனியன் உரை முற்றிற்று.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி

தனியன் உரை

(திருமாலையாண்டான் அருளிச்செய்தது.)

தமேவ மத்வா பரவாஸுதேவம் ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம்:
ப்ராபோதிகீம் யோக்ருத ஸூக்திமாலாம் பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே.

ய: பரவாஸுதேவம் ரங்கேசயம் ராஜவத் அர்ஹணீயமேவ மத்வா ப்ராபோதிகீம் ஸூக்திமாலாம் அக்ருத, தம் பகவந்தம் பக்தாங்க்ரி ரேணும் ஈடே.

யாவரொரு ஆழ்வார் பரவாஸு தேவ மூர்த்தியான பெரிய பெருமாளை ராஜோபசார யோக்யராக நினைத்து திருப்பள்ளியுணர்த்துமதான திவ்யப்ரபந்தத்தை அருளிச் செய்தாரோ (அப்படிப்பட்ட) ஞானம் முதலிய குணங்கள் அமைந்த தொண்டரடிப் பொடியாழ்வாரைத் துதிக்கின்றேன்.

திருப்பள்ளியெழுச்சி

(திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்தது.)

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயல்தென்னரங்கத்தம்மானைப் பள்ளி
யுணர்த்தும்பிரானுதித்த வூர்.

வண்டு திணர்த்த வயல் தென் அரங்கத்து அம்மானை பள்ளி உணர்த்தும் பிரான் தொண்டரடிப் பொடி உதித்த ஊர் மா மறையோர் மன்னிய சீர் மண்டங்குடி தொல் நகரம் என்பர்

வண்டுகளானவை நெருங்கிப் படிந்திருக்கப்பெற்ற கழனிகள் சூழ்ந்த அழகிய திருவரங்கத்தில் (கண்வளர்ந்தருள்கிற) பெரிய பெருமாளைத் திருப்பள்ளி யுணர்த்துமவராய்ப் பரமோபகாரகராய் "தொண்டரடிப்பொடி" என்னும் திருநாமமுடையரான ஆழ்வார் திருவவதரித்த திவ்ய தேசமாவது—, சிறந்த வைதிகர்கள் பொருந்தி வாழ்தற்கிடமான சீர்மையையுடைய 'திருமண்டங்குடி' என்கிற அநாதியான நகரமாகும் என்று பெரியோர் கூறுவர்.

தனியனுரை முற்றிற்று.

கதிரவன்குணதிசைச்சிகரம்வந்தணைந்தான் கனவிருளகன்றதுகாலையம்பொழுதாய் *
மதுவிரிந்தொழுகினமாமலரெல்லாம் வானவரரசர்கள்வந்துவந்தீண்டி *
எதிர்திசைநிறைந்தனரிவரொடும்புகுந்த இருங்களிற்றீட்டமும்பிடியொடுமுரசும் *
அதிர்தலிலலைகடல்போன்றுளதெங்கும் அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (1)

அரங்கத்து அம்மா கதிரவன் குண திசை சிகரம் வந்து அணைந்தான்; கனம் இருள் அகன்றது; அம் காலை பொழுது ஆய் மாமலர் எல்லாம் விரிந்து மது ஒழுகின; வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி எதிர் திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த இரு களிறு ஈட்டமும் பிடியொடு முரசும் அதிர்தலில் எங்கும் அலை கடல் போன்று உளது; பள்ளி எழுந்தருளாய்,

திருவரங்கத்தில் பள்ளிகொண்டருளும் ஸ்வாமியே! ஸூர்யனானவன் கிழக்குத் திக்கிலே (உதயகிரியின்) கொடுமுடியிலே வந்து கூடினான்; (இரவில்) அடர்ந்திருந்த இருளானது நீங்கியொழிந்தது; அழகிய காலைப் பொழுதுவர, சிறந்த புஷ்பங்களெல்லாம் விகாஸமடைய தேன் வெள்ள மிடா நின்றன; தேவர்களும் ராஜாக்களும் ஒருவர்க்கொருவர் முற்கோலி வந்து திரண்டு திருக்கண்ணோக்கான தெற்கு திக்கிலே நிறைந்துநின்றார்கள்; இவர்களோடு கூடவந்த (இவர்களது வாஹநமாகிய) பெரிய ஆண்யானைத் திரள்களும் பெண்யானைத் திரள்களும் பேரிவாத்யங்களும் சப்திக்கும்போது எத்திசையும் அலையெறியாநின்ற ஸமுத்ர கோஷத்தையொத்திருந்தது; (ஆதலால்) திருப்பள்ளியைவிட்டு எழுந்திருக்கவேணும்.

கொழுங்கொடிமுல்லையின்கொழுமலரணவிக் கூர்ந்ததுகுணதிசைமாருதமிதுவோ *
எழுந்தனமலரணைப்பள்ளிகொள்ளன்னம் ஈன்பனிநனைந்த தமிருஞ்சிறகுதறி *
விழுங்கியமுதலையின்பிலம்புரைபேழ்வாய் வெள்ளெயிறுறவதன்விடத்தினுக்கனுங்கி *
அழுங்கியவானையினருந்துயர்கெடுத்த அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (2)

குணதிசை மாருதம் கொழு கொடி முல்லையின் கொழுமலர் அணவி இதுவோ கூர்ந்தது; மலர் அணை பள்ளிகொள் அன்னம் ஈன் பனி நனைந்த தம் இரு சிறகு உதறி எழுந்தன; விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ் வாய் வெள் எயிறு உற அதன் விடத்தினுக்கு அனுங்கி அழுங்கிய ஆனையின் அரு துயர் கெடுத்த அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய்,

கீழ் காற்றானது செழுமை தங்கிய கொடியையுடைத்தான முல்லைச் செடியிலுண்டான அழகிய மலர்களை அணைந்துகொண்டு இதோ வீசாநின்றது; புஷ்பசயநத்திலே உறங்குகின்ற ஹம்ஸங்களானவை, (மழைபோல்) சொரிகிற பனியாலே நனைந்த தங்களுடைய அழகிய சிறகுகளை உதறிக்கொண்டு உறக்கம் விட்டெழுந்தன; (தன்காலை) விழுங்கின முதலையினுடைய பாழிபோன்ற பெரிய வாயிலுள்ள வெளுத்த கோரப்பற்கள் ஊன்ற அம்முதலையினுடைய பல்விஷத்திற்கு மிகவும் நோவுபட்ட கஜேந்திராழ்வானுடைய பெரிய துக்கத்தைப் போக்கியருளின அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய்,

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த அமலனாதிபிரான்

தனியன் உரை.

(பெரியநம்பிகள் அருளிச்செய்த தனியன்.)

𑌶𑍍𑌲𑍋 ॥ 𑌆𑌪𑌾𑌦𑌚𑍂𑌡𑌮𑌨𑍁𑌭𑍂𑌯 𑌹𑌰𑌿𑌂 𑌶𑌯𑌾𑌨𑌂
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌕𑌵𑍇𑌰𑌦𑍁𑌹𑌿𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌦𑌿𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 ।
𑌅𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑌾𑌂 𑌨𑌯𑌨𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌂
𑌯𑍋 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌕𑌾𑌯 𑌮𑌨𑌵𑍈 𑌮𑍁𑌨𑌿𑌵𑌾𑌹𑌨𑌂 𑌤𑌂 ॥

ஆபாதசூட மநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா:
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மநவை முநிவாஹநம் தம். ॥

பதவுரை.

𑌯𑌃	யாவரொரு திருப்பாணாழ்வார்	𑌨𑌯𑌨𑌯𑍋𑌃 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑌾𑌂	(தமது) திருக்கண்கள் (அப்பெருமானன்றி) மற்றொன்றையும் காணமாட்டாமையை
𑌕𑌵𑍇𑌰𑌦𑍁𑌹𑌿𑌤𑍁𑌃	திருக்காவேரியின்		
𑌮𑌧𑍍𑌯𑍇	நடுவில்		
𑌶𑌯𑌾𑌨𑌂	திருக்கண்வளர்ந்தருளுகிற	𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌕𑌾𑌯	அறுதியிட்டருளினரோ,
𑌹𑌰𑌿𑌂	அழகியமணவாளப் பெருமாளை	𑌤𑌂	அப்படிப்பட்ட
𑌆𑌪𑌾𑌦 𑌚𑍂𑌡𑌂	திருவடி தொடங்கித் திருமுடியளவாக	𑌮𑍁𑌨𑌿𑌵𑌾𑌹𑌨𑌂	லோகஸாரங்க மஹாமுனியை வாஹநமாகக்கொண்ட திருப்பாணாழ்வாரை
𑌅𑌨𑍁𑌭𑍂𑌯	(கண்குளிர) அநுபவித்து		
𑌮𑍁𑌦𑌿𑌤 𑌅𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾	மகிழ்ந்த சிந்தையராய்	𑌮𑌨𑌵𑍈	சிந்திக்கக்கடவேன்.

* திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையா லடிவருடப் பள்ளிகொள்ளுங் கருமணியாகிய ரங்கநாதனைக் கண்ணாரக்கண்டுகளித்து, "அமலனாதிபிரா னடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்" என்று தொடங்கி ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு அவயவமாகப் பாதாதிகேசாந்தம் அநுபவித்து, இறுதியில் "என்னமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று 'இவ்வரிய பெரிய விஷயத்தைக் காணப்பெற்ற எனது கண்களானவை

இனி வேறொரு பொருளையும் காணமாட்டா' என்று தமது உறுதியை வெளியிட்டருளின திருப்பாணாழ்வாரைச் சிந்திக்கக்கடவேன் என்கிறது.

“முநிவாஹநம்” என்றதன் விவரம் இவ்வாழ்வாரது வைபவத்திலே விரித்துரைக்கப்பட்டது; அங்கே காண்க.

(திருமலைநம்பி அருளிச்செய்த தனியன்.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.)

காட்டவே கண்டபாத கமலநல் லாடையுந்தி
தேட்டரு முதரபந்தந் திருமார்வு கண்டஞ்செவ்வாய்
வாட்டமில் கண்கள்மேனி முனியேறித் தனிபுகுந்து
பாட்டினால் கண்டுவாழும் பாணர்தாள் பரவினோமே.

முனி ஏறி	லோகஸாரங்க முனியின் (தோளின்மேல்) ஏறி	கண்டம்	திருக்கழுத்தும்
தனி புகுந்து	தனியே உள்ளே புகுந்து	செம் வாய்	சிவந்த வாயும்
காட்டவே கண்ட	(அம்முனிவரர்) காண்பித்தபடியே கண்டு ஸேவிக்கப்பட்ட	வாட்டம் இல்	சோர்வு இல்லாத
பாத கமலம்	திருவடித்தாமரைகளும்	கண்கள்	திருக்கண்களும்
நல் ஆடை	விலக்ஷணமான திருப்பீதாம்பரமும்		(ஆகிய இவற்றோடு கூடிய)
உந்தி	திருநாபியும்	மேனி	திருமேனியை
தேட்டரும்	கிடைத்தற்கு அரிதான	பாட்டினால் கண்டு வாழும்	பாசுரங்களின் அநுஸந்தானத்தோடே ஸேவித்து ஆனந்தித்த
உதர பந்தம்	பொன் அரைநாணும்	பாணர்	திருப்பாணாழ்வாருடைய
திரு மார்வு	பிராட்டி வாழ்கிற மார்பும்	தாள்	திருவடிகளை
		பரவினோம்	துதிக்கப் பெற்றோம்.

கீழ்த்தனியனிற் பொருளை விவரிக்கிறது. இத்தனியன் லோகஸாரங்கமாமுனிகள் தமது தோளிலே ஏற்றிக்கொண்டு கோயிலுக்குள்ளே சென்று அழகிய மணவாளனுடைய ஸகலாவயவ ஸௌந்தர்யத்தையும் நன்கு காட்டியருள, “அமலனாதிபிரான்” என்று தொடங்கித் திருவடிமுதல் ஒவ்வொரு அவயவங்களையும் ஸேவித்து அநுபவிக்கப்பெற்ற திருப்பாணாழ்வாரைத் துதித்தோமென்கிறது.

பாதகமலம்—வடசொல் தொடர். தேட்டரும்—தேடுதற்கு முடியாத—துர்லபமான—மிகச்சிறந்த என்றபடி. உதரபந்தம்—வடசொல்தொடர்; திருவயிற்றில் கட்டுகிற பொன்னரைநாண். கண்டம்—கழு. ... *

தனியன் உரை முற்றுப்பெற்றது.

ஸ்ரீரஸ்து.

மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

கண்ணிநுண் சிறுத்தாம்பு.

தனியன் உரை.

[நாதமுனிகள் அருளிச்செய்த தனியன்.]

𑌶𑍍𑌲𑍋: 𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌶𑍍𑌶𑌠𑌾𑌰𑍇
𑌰𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌮𑍁𑌪𑌗𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌭𑍋𑌗𑌃 ।
𑌅𑌪𑌿𑌚𑌗𑍁𑌣𑌵𑌶𑌾𑌤𑍍 𑌤𑌦𑍇𑌕𑌶𑍇𑌷𑍀
𑌮𑌧𑍁𑌰𑌕𑌵𑌿𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍇 𑌮𑌮𑌾𑌵𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 ॥

அவிதிதவிஷயாந்தரஶ்ஶடாரே ருபநிஷதாமுபகாநமாத்ரபோக:।
அபிச குணவஶாத் ததேகஶேஷீ மதுரகவிர்ஹ்ருதயே மமாவிரஸ்து.॥

பதவுரை.

𑌅𑌵𑌿𑌦𑌿𑌤 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌃	(நம்மாழ்வாரைத் தவிர) வேறொரு விஷயத்தைய மறியாதவரும்	𑌗𑍁𑌣𑌵 𑌶𑌾𑌦𑌪𑌿𑌚	குணமடியாகவும்
𑌶𑌠𑌾𑌰𑍇𑌃	நம்மாழ்வாருடைய (திவ்ய ஸூக்திகளாகிய)	𑌤𑌦𑍇𑌕 𑌶𑍇𑌷𑍀	அந்த நம்மாழ்வாரொருவரையே தமக்கு சேஷியாகக் கொண்டவருமான
𑌉𑌪𑌨𑌿 𑌷𑌦𑌾𑌮𑍍	த்ராவிடோபநிஷத்தான திவ்யப்ரபந்தங்களை	𑌮𑌧𑍁𑌰𑌕𑌵𑌿𑌃	மதுரகவியாழ்வார்
𑌉𑌪𑌗𑌾𑌨𑌮𑌾 𑌤𑍍𑌰𑌭𑍋𑌗𑌃	இசைபாடுவது ஒன்றையே பேரின்பமாகக் கொண்டவரும்	𑌮𑌮𑌹𑍃𑌦𑌯𑍇	என் நெஞ்சில்
		𑌆𑌵𑌿𑌰𑌸𑍍𑌤𑍁	ஆவிர்ப்பவிக்கக்கடவர்.

நம்மாழ்வார் "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங்கண்ணன்" என்று எம்பெருமானொருவனைத்தவிர வேறொரு விஷயத்தையும் அறியாதிருந்தாற்போல, அந்த நம்மாழ்வாரொருவரைத்தவிர வேறொன்றையுமறியாதவராய், அவருடைய அநுபவம் வழிந்த அருளிச்செயலாகிய திருவாய்மொழிப்பாவின் இன்னிசை பாடித்திரிவதையே காலக்ஷேபமாகக் கொண்டவராய், அவ்வாழ்வார் திறத்திலே ஸ்வரூபப்ரயுக்தமான தாஸ்யத்தோடு குணக்ருதமான தாஸ்யத்தையும் வஹிக்குமவரான ஸ்ரீமதுரகவிகள் எனது நெஞ்சில் எழுந்தருளியிருக்க வேணுமென்கிறது. மதுரகவிகளுக்கு இருந்த ஆசார்ய நிஷ்டை தமக்கும் உண்டாகவேணுமென்ற அவாவுடன் அவரை அநுஸந்திக்கிறபடி.

சடாரே: என்பதை தேஹலீதீபகமாகக்கொண்டு பிற்பதத்தோடும் மேற்பதத்தோடும் அந்வயித்து, (முதலில் பஞ்சமீவிபக்தியாகக்கொண்டு) நம்மாழ்வாரிற் காட்டிலும் வேறொன்றை யறியாதவராய், என்றும் (பிறகு ஷஷ்டீவிபக்தியாகக்கொண்டு) நம்மாழ்வாருடைய அருளிச்செயலிசைபாடுவதையே காலக்ஷேபமாகக்கொண்டவராய் என்றும் உரைத்தலும் ஒக்குமென்க. இங்கு "விஷயாந்தர" என்றது ப்ராக்ருத விஷயங்களை அன்று; பகவத்விஷயத்தையாம். "உண்டபோதொருவார்த்தையும் உண்ணாதபோதொருவார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேருண்டிறே; அவர்கள் பாசுரங்கொண்டன்று இவ்வர்த்தமறுதியிடுவது; அவர்களைச் சிரித்திருப்பார் *ஒருவருண்டிறே; அவர் † பாசுரங்கொண்டு இவ்வர்த்தமறுதியிடக்கடவோம்" என்ற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியின் வியாக்யானம் ஸேவிக்க.

உபநிஷதாம் என்கிற பதம்-பஹுவசநம்-நான்கு வேதங்களினுடைய ஸாரமாக ஆழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு திவ்யப்ரபந்தங்களையுங்குறிக்கும். இப்பதம் உபமாந என்பதில் அந்வயிக்கவேண்டுகையால் ஏகதேசாந்வய மெனப்படும். இந்த ஏகதேசாந்வயம் சாஸ்த்ர ஸம்மதமேயாம். பல்லாயிரம் ப்ரயோகங்களும் உள்ளன.

ததேகசேஷீ = ஸ: ஏக: சேஷீ யஸ்ய ஸ: என்று பஹுவ்ரீஹிஸமாஸம் இங்குக் கொள்ளத்தக்கது. குணக்ருததாஸ்யத்திற்காட்டில் ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யமே ப்ரதானமென்று ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தமாயினும், ஆழ்வார் திறத்தில் மதுரகவிகள் குணங்களுக்குத் தோற்றும் அடிமைப்பட்டார் என்பதைத் தெரிவிக்கிறது - மூன்றாமடி. அபிச என்றதனால் முதலடியில் ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யம் கூறப்பட்டதாக விளங்கும்.

[இதுவும் நாதமுனிக ளருளிச்செய்தது.]

வேறொன்றும் நானறியேன் வேதந் தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென் றேத்தும் மதுரகவி யாரெம்மை
ஆள்வா ரவரே யரண்.

* ஒருவர்—மதுரகவிகள். † கண்ணிநுண் சிறுத்தாம்பு.

வேறு ஒன்றும் நான் அறியேன்	"(நம்மாழ்வார் தவிர) வேறொரு பொருளும் நான் அறியமாட்டேன் ;	சடகோபன்	நம்மாழ்வார்
வேதம் தமிழ்செய்த	வேதார்த்தங்களைத் தமிழாக அருளிச்செய்த	எங்கள் வாழ்வு ஆம் என்று	எமக்கு உஜ்ஜீவனமாவர்" என்று
மாறன்	மாறனென்னும் திருநாமத்தை யுடையவரும்	வந்தும்	ஸ்தோத்திரஞ் செய்தருளின
வண் குருகூர் ஏறு	அழகிய திருக்குருகூர் நகர்க்குத் தலைவருமான	மதுரகவியார்	மதுரகவியாழ்வார்
		எம்மை ஆள்வார்	நம்மை ஆள்பவர் ;
		அவரே	அந்த மதுரகவிகளே
		அரண்	(ப்ரபந்நகுலத்துக்கு) ரக்ஷகர்.

"வேறொன்றும் நானறியேன் வேதந் தமிழ்செய்த மாறன் சடகோபன் வண்குருகூரே றெங்கள் வாழ்வாம்" என்னுமளவும் மதுரகவியாழ்வாருடைய அநுஸந்தானத்தின் அநுவாதம். அன்றி, "வேறொன்றும் நானறியேன்" என்பதைத் தனியாகப்பிரித்து அதனை இத்தனியனுக்கு வக்தாவான நாதமுனிகளுடைய சொல்லாக உரைக்கக்கூடுமாயினும் கீழ்த்தனியனில் "அவிதித விஷயாந்தர:" என்னுமதுக்கு மொழிபெயர்ப்பாக அருளிச்செய்தவிதற்கு முந்தினபொருளே பொருந்துமெனக்.

[வேதம் தமிழ்செய்த.] ஆழ்வாருளிச்செயல்கள், அளவிறந்த வேதங்களிலே எளிதிற் காணவொண்ணாதபடி மறைந்துகிடந்த தத்துவப்பொருள்களை யெல்லாம் எடுத்துத் தெளிவுபடச் சொல்வதற்காகத் திருவவதரித்தவை. சுருக்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகுகளோடு தத்துவப் பொருள்களின் ஸாரங்களை எடுத்துச்சொல்லி விளக்குந்தன்மையில் வடமொழி வேதங்களினும் இத்தென்மொழிவேதம் மிகச்சிறந்ததென்று கருதிய கம்பர், அளவிறந்த அரியபெரிய பல வேதங்களிலுமுள்ள பொருள்களெல்லாங்கூடி, திருவாய்மொழி ஆயிரம் பாட்டிற்கூறிய ஸாரார்த்தத்தின் ஒரு பகுதியளவுஞ் சொல்லவில்லை என்னுங் கருத்தமையச் சடகோபரந்தாதியிற் பாடிய

"ஆற்றிற்பொதிந்த மணலின் தொகையரு மாமறைகள்
வேற்றிற்பொதிந்த பொருள்களெல்லாம் விழுமாக்கமலஞ்
சேற்றிற்பொதி யவிழ்க்கும் குருகூர் செஞ்சொற்பதிக
நூற்றிற்பொதிந்த பொருளொரு கூறுறு வல்லிலவே"

என்னும் பாட்டை அநுஸந்திக்க.

ஸம்ஸ்க்ருத வேதம்போலவே தமிழ்மறையாகிய திவ்யப்ரபந்தங்களும் நித்யமென்பது ஆன்றோர் கொள்கை. திவ்யப்ரபந்தங்களை ஆழ்வார்கள் இயற்றியதாகச் சொல்லுதல் என்னெனின் ; வடமொழி வேதங்களை ஹம்ஸரூபியான திருமாலினிடம் உபதேசம்பெற்ற பிரமன் தனது வாக்கினால் வெளியிட்ட மாத்திரத்தைக்கொண்டு "முன்னம் திசைமுகனைத் தான்படைக்க, மற்றவனும் முன்னம் படைத்தனன் நான்மறைகள்" (பெரியதிருமடல்) என்று பிரமன்தானே

அவற்றைப் படைத்ததாகச் சொல்லுதலும், பின்பு அவ்வடமொழி வேதங்களின் ஒவ்வொருபகுதியை ஒவ்வொரு முனிவர் ஒவ்வொருசமயத்தில் வெளியிட்டதுகொண்டு அந்தந்தப்பகுதியை அந்தந்த முனிவரியற்றியதுபோல (தைத்திரீயம், காண்வம் இத்யாதியாக) அவரவர் பெயரையிட்டு வழங்குதலும் போலவே, எம்பெருமான் திருவருளால் உணர்ந்த ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களை உணர்ந்துவெளியிட்ட மாத்திரத்தைக்கொண்டு அவர்கள் செய்ததாகச் சொல்லுதல் உபசாரவழக்காம் என்பது ஸம்ப்ரதாயம். இனி இங்கு விரித்துரைக்கவேண்டும் அம்சங்களை மற்றோரிடத்திற் பன்னியுரைப்போமாக.

மாறன் = ஆழ்வார் பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பால்குடித்தல் முதலிய லோகவ்யாபாரம் ஒன்றுமின்றி உலகநடைக்கு மாறாக இருந்ததனால் இவர்க்கு மாறன் என்று திருநாமமாயிற்று; வலிய வினைகட்கு மாறாக இருந்தவராதலும், அந்யமதஸ்தர்களை அடக்கி அவர்கட்கு ஶத்ருவாயிருத்தலாலும், பாண்டியநாட்டுக்குத் தலைமையாகத் தோன்றியதனாலும் வந்தபெயரென்றலுமுண்டு.

சடகோபன் = கர்ப்பத்திலிருக்கிறபொழுது ஞானிகளாயிருக்கின்ற குழந்தைகளைப் பிறந்தவுடனே தனது ஸ்பர்ஶத்தால் அஜ்ஞாநத்துக்கு உள்ளாக்கி அழுதல் அரற்றுதல் முதலியன செய்யும்படி பண்ணிவிடுந் தன்மையதான ஶடமென்னும் வாயு, இவ்வாழ்வார் அவதரித்தபொழுது இவரையும் தொடுதற்குவர, அப்பொழுது இவர் அதனை ஹுங்காரத்தால் ஒறுத்து ஓட்டியொழித்ததனால் சடகோபர் என்று இவர்க்குத் திருநாமமாயிற்று. எம்பெருமானுடைய திவ்யமங்கள குணங்களாகிய அமுதவெள்ளத்திலே முழுகி மிகவும் ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடுபவராதல்பற்றி ஆழ்வார்கள் என்று பெயர்பெற்ற பரமபாகவதர்களில் இவர் ப்ரதாநராதலால், ஆழ்வார் என்பது இவர்க்குச் சிறப்புப் பெயராகவழங்கும். மாறன், பராங்குசன், வகுளாபரணன், திருநாவீறுடையபிரான், திருக்குருகூர்நம்பி, குருகைப்பிரான், வழுதிநாடன் முதலிய திருநாமங்களும் இவர்க்கு உண்டு.

குருகூர் — நூற்றெட்டுத் திருப்பதிகளுள் பாண்டியநாட்டுத் திருப்பதி பதினெட்டில் ஒன்று; ஆழ்வார்திருநகரி என்று ப்ரஸித்தி. குருகாபுரீ என்று வடமொழித்திருநாமம். ஏறு = வடமொழியில், புங்கவ: ருஷப: இத்யாதி ஶப்தங்கள்போல் தமிழில் ஏறு என்பது ஆண்பாற் சிறப்புப்பெயர்; ஶ்ரேஷ்டன் என்றபடி; "வண்குருகூரேறு" என்றவிடத்து வண்மையைக் குருகூரில் அந்வயிப்பதினும் குருகூரேற்றில் அந்வயிப்பது அழகிதாம். அடியார்கட்கு அமுதவெள்ளமாக அருளிச்செயல்களை உபகரித்தருளிய உதாரஶிகாமணியாகிய குருகூரதிபதி என்கை.

முதலடியில் "நான் அறியேன்" என்று ஒருமையாகக் கூறியதற்கு ஏற்ப "என் வாழ்வாமென்றேத்தும்" என்று மேலும் ஒருமையாகவே கூறவேண்டியிருக்க, எங்கள் என்று பன்மையாகக்கூறியது-தம்மோடு ஸம்பந்தம்பெற்ற

ப்ரபந்த ஸந்தாநத்தவரிலவரையும் உளப்படுத்திக் கூறியவாறுமெனக்கொள்க. திருவிருத்தத்தில் ஆழ்வார் "இனி யாம் உறாமை" என்று முதலிற் பன்மையாகக்கூறி, மேல் "அடியேன் செய்யும் விண்ணப்பமே" என்று ஒருமையாகக் கூறியதை-தம்முடைய ஸம்பந்தம்பெற்ற ப்ரபந்நர்கள் எல்லார்க்குமாகத் தாம் ஒருவர் விஜ்ஞாபநம் பண்ணுகிறாரெனக்கொண்டு பொருத்துதல் இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

"அவரே சரண்" என்றும் பாடமுண்டாம்.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ

பெரிய திருமொழித் தனியன்கள்.

(திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்தது.)

శ్లో॥ కలయామి కలిధ్వంసం కవిం లోకదివాకరమ్!
యస్య గోభిః ప్రకాశాభిరావిద్యం నిహతం తమః॥.

[கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்
யஸ்ய கோபி: ப்ரகாசாபிராவித்யம் நிஹதம் தம:.]

பதவுரை.

யஸ்ய	யாவனொரு ஆழ்வாருடைய	(தம்)	அப்படிப்பட்டவராய்
ப்ரகாசாபி:	உலகமெங்கும் விளங்குகின்ற	கலி த்வம்ஸம்	கலிதோஷத்தைத் தொலைப்பவராய்
கோபி:	கிரணங்கள் போன்ற ஸ்ரீ ஸூக்திகளாலே	லோக திவாகரம்	உலகத்துக்கெல்லாம் ஒரு ஸூர்யன் போன்றவரான
ஆவித்யம்	அஜ்ஞாந ப்ரயுக்தமான	கவிம்	ஸ்ரீ பரகாலகவியை
தம:	இருளானது	கலயாமி	த்யானம் செய்கிறேன்.
நிஹதம்	நீக்கப்பட்டதோ,		

* * * கலிகன்றி என்று ப்ரஸித்தரான திருமங்கையாழ்வாரை த்யானிக்கின்றேனென்கிறது. இதில் ஆழ்வார் ஸூர்யனாக வருணிக்கப்படுகிறார். வடமொழியில் గో (கோ) என்கிற சப்தம் கிரணம், சொல் முதலிய பல பொருள்களையுடையது. ஸூர்யன் தனது கோக்களினால் (கிரணங்களால்) புறவிருள்களைப் போக்குவான்; இப்பரகாலதிவாகரர் தமது கோக்களினால் (ஸ்ரீஸூக்திகளால்) அகவிருளைப் போக்குவார். இத்தால், ஆதித்ய கிரணங்களால் அகலமாட்டாத உள்ளிருள் இவரது ஸ்ரீஸூக்திகளால் அகலுமென்று அதிசயமும் சொல்லப்பட்டதாயிற்று.

கவிம் என்கிற ஸாமாந்யசப்தம் - ஆசுகவி, மதுரகவி, சித்ரகவி, விஸ்தாரகவி என்னும் கவித்திறங்கள் நான்கிலும் ஆழ்வார் வல்லவரென்பதை விளக்கும். ஆவித்யம் = அவித்யயா க்ருதம்-ஆவித்யம் என்று தத்திதவ்ருத்தியாம். ... *

(எம்பெருமானாருளிச் செய்தது.)

(நேரிசை வெண்பா.)

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கோள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

பரகாலன்	புறமதத்தவர்கட்கு யமன்போன்ற திருமங்கையாழ்வார்
வாழி	வாழ்ந்திடுக ;
கலிகன்றி	கலியைக்கெடுத்த திருமங்கையாழ்வார்
வாழி	வாழ்ந்திடுக ;
குறையலூர்	திருக்குறையலூரில்
வாழ்	வாழ்கின்ற
வேந்தன்	அரசரான திருமங்கையாழ்வார்
வாழி	வாழ்ந்திடுக ;
மாயோனை	எம்பெருமானிடத்தினின்று

வாள் வலியால்	தமது வாளின் வலிமையினால்
மந்திரம் கொள்	திருமந்திரத்தைப் பெற்றவராயும்
தூயோன்	பரமபரிசுத்தராயுமிருக்கிற
மங்கையர் கோன்	திருமங்கையாழ்வாரது
சுடர்	ஒளிபொருந்தியதும்
மானம்	பெருமை பொருந்தியதுமான
வேல்	கொற்ற வேலானது
வாழி	வாழ்ந்திடுக.
	(அரோ—அசை.)

* * *—திருமங்கையாழ்வாரையும் அவரது திவ்வியாயுதத்தையும் வாழ்த்துகிறது இது.

எப்பெருமானது வைபவங்களைப் பொறாத பாவிகளைக் கண்டித்து ஒழிப்பவரும், கலிதோஷம் நீங்கும்படி உலகை வாழ்விப்பவரும், திருக்குறையலூரைத் திருவவதாரஸ்தலமாக வுடையவரும், மங்கைநகர்க்கு அரசருமான திருமங்கையாழ்வார் பல்லாண்டு பல்லாண்டாக வாழவேணும். அவரது திருக்கையிலே திகழ்வதும் எம்பெருமானை வெருட்டித் திருமந்திரோபதேசம் செய்வித்துக் கொண்டதுமான வேலும் வாழி என்றதாயிற்று.

பின்னடிகளில் அறியவேண்டிய வரலாறு அவதாரிகையில் விவரிக்கப்பட்டுள்ளமை காண்க.

தூயோன் = வழிபறித்தலாகிய அக்ருத்யத்தைச் செய்தாலும், அச்செல்வம் முழுவதையும் பகவத்பாகவத கைங்கரியத்துக்கே உபயோகித்ததனாலும் அபாகவதர்களின் பொருளை அபஹரித்துப் பாகவதர்க்கு உரியதாக்கியதனாலும் புகழ்புண்ணியங்களையே யன்றிப் பழிபாவங்களைச் சிறிதும் பெற்றிலர் என்பது தோன்றத் தூயோன் என விசேஷிக்கப்பட்டாரென்க.

ஞானசம்பந்தர் முதலிய புறமதத்தவர்களை வாதப்போரில் வென்று அவர்கட்கு ம்ருத்யுவாயிருந்ததனால் பரகாலன் என்றும், தமது திவ்ய ப்ரபந்தங்களால் உலகத்தை நன்னெறிச் செலுத்திக் கலிதோஷத்தைக் கடிந்ததனால் கலிகன்றி என்றும் இவ்வாழ்வார்க்குத் திருநாமங்களாயின வென்க

சுடர்மான வேல் = சீர்காழியிலிருந்த ஞானசம்பந்த மூர்த்திநாயனார் ஆழ்வாருடைய நாவீறுகண்டு வியந்து தமது வேலாயுதத்தை இவர்க்குத் திருமுன் காணிக்கையாகச் சமர்ப்பித்து நன்கு மதித்து உபசரித்து வழிபட்டனர் என்ற வரலாறு அறிக. ... ... *

ஆழ்வான் அருளிச்செய்தது.

(கட்டளைக் கலித்துறை.)

நெஞ்சுக் கிருள்கடி தீப மடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்லவமுதம் தமிழ நன்னூல்துறைகள்
அஞ்சுக்கிலக்கிய மாரணசாரம் பரசமயப்
பஞ்சுக் கனலின்பொறி பரகாலன் பனுவல்களே.

பரகாலன் பனுவல்கள்	திருமங்கையாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகள் (எப்படிப்பட்டவை யென்றால்)	நல் நூல்	நல்ல நூல்களில் சொல்லப்பட்டுள்ள
நெஞ்சுக்கு	நெஞ்சிலுண்டான	துறைகள் அஞ்சுக்கு	எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்கிற ஐந்து லக்ஷணங்கட்கும்
இருள்	இருளை	இலக்கியம்	லக்ஷ்யமாயுள்ளவை ;
கடி	போக்கக்கூடிய	ஆரணம்	வேதத்தினுடைய
தீபம்	திருவிளக்காம்;	சாரம்	ஸாரமானவை ;
அடங்கா	ஒன்றுக்குமடங்காத		
நெடு பிறவி நஞ்சுக்கு	நீண்ட ஸம்ஸாரமாகிற விஷத்தை மாற்றுவதற்கு	பரசமயம் பஞ்சுக்கு	மதாந்தரக் கோட்பாடுகளாகிய பஞ்சுக்கு
நல்ல அமுதம்	சிறந்த அமிருதமாம்;	அனலின் பொறி	நெருப்புப் பொறியாம்.
தமிழ	தமிழினலாகிய		

* * *—திருமங்கையாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளின் பெருமை சொல்லுகிறது இது. இவருடைய ஸ்ரீஸூக்திகளை ஓதி உணர்ந்தால் மனனக மலங்களெல்லாம் அற்று ஹ்ருதயம் நிர்மலமாகும்; இந்த ஸ்ரீஸூக்திகளை ஓதுமவர்களுக்கு "அண்டமாள்வதாணை" என்றபடி பரமபதம் ஸித்தமாதலால் ஸம்ஸாரத்தை அடியறுப்பவையாம் இவை; எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்று தமிழ் நூல்களிற் சொல்லப்பட்டுள்ள இலக்கணங்களுக்கு இலக்கியமாம் இவை ; ஸகலவேதங்களிலும் சொல்லப்பட்டுள்ள அர்த்தங்கள் இவ்வாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளில் சுருங்கக் காணலாயிருக்கையாலே வேதஸாரமுமாம் இவை; இந்த ஸ்ரீஸூக்திகள் அவதரித்தபின்பு பாஹ்யகுத்ருஷ்டி மதங்களெல்லாம் மாண்டுபோயினவாதலால் பரசமயப் பஞ்சுக்கு அனலின் பொறியாம் இவை.

கடிதீபம்—கடிகின்ற தீபம்; வினைத்தொகை. பிறவி நஞ்சுக்குநல்லவமுதம் = விஷம் பட்டவிடத்தில் அமுதமூற்றினால் நல்வாழ்ச்சியாவதுபோல் ஸம்ஸாரிகள் இப்பிரபந்தங்களை ஓதினால் தாபத்ரயமும் தணியப்பெற்று உஜ்ஜீவித்திடுவர்களென்கை. தமிழ நன்னூல் துறைகளஞ்சுக்கிலக்கியம் = இந்த ஸ்ரீஸூக்திகளைப் பார்த்து லக்ஷணம் கட்டலாம்படி குற்றமொன்றுமின்றி நற்றங்கள் நிறைந்திருக்கும் என்கை. "தமிழ் நன்னூல்" என்ற பாடம் மறுக்கத்தக்கது. 'தமிழ' என்றே ஓதுக. "நேர் பதினாறே நிரைபதினேழென்றோதினர் கலித்துறை'

யோரடிக் கெழுத்தே" என்பது இலக்கணமாதலின். இங்கு நன்னூல் என்றது ப்ரஸித்தமான நன்னூலென்னும் இலக்கண நூலைச் சொல்லிற்றாகவுமாம். அஞ்சு=ஐந்து என்பதன் போலி. இலக்கியம்—லக்ஷ்யம். ஆரணஸாரம்—வடசொல் தொடர். ... ... *

எம்பார் அருளிச்செய்தது.

(ஒரு விகற்ப நேரிசை வெண்பா.)

எங்கள் கதியே யிராமாநுச முனியே
சங்கை கெடுத்தாண்ட தவராசா—பொங்குபுகழ்
மங்கையர்கோ னீந்த மறையாயிர மனைத்தும்
தங்கு மனம்நீ யெனக்குத் தா.

எங்கள் கதியே	எங்களுக்குப் புகலாயிருப்பவரே !	ஈந்த	தந்தருளின
இராமாநுச முனியே	ஸ்ரீ ராமாநுச முனிவரே !	மறை ஆயிரம்	வேதரூபமான திருமொழி யாயிரத்தையும்
சங்கை	ஸம்சயங்களை யெல்லாம்	அனைத்தும்	மற்றுமுள்ள எல்லாப் பிரபந்தங்களையும்
கெடுத்து	போக்கி	தங்கும்	தரிக்கக்கூடிய
ஆண்ட	ரக்ஷித்த	மனம்	மநஸ்ஸை
தவ ராசா	மஹாதபஸ்வியே !	நீ	தேவரீர்
பொங்கு புகழ்	உலகமெங்கும் பரவிய புகழையுடையரான	எனக்கு	அடியேனுக்கு
மங்கையர் கோன்	திருமங்கையாழ்வார்	தா	தந்தருளவேணும்.

* * *—எம்பார் என்னுமாசிரியர் எம்பெருமானார் திருவடிகளிலே வந்து வணங்கிப் பிரார்த்திக்கின்றார்—; ஸ்வாமிந்! தேவரீரையொழிய வேறுயாரும் அடியோங்களுக்குப் புகலாவாரில்லை; தத்துவ நூல்களில் எங்களுக்கு உண்டான எவ்வளவோ ஸம்சயங்களை இதுவரையில் தேவரீர் போக்கியருளி மஹோபகாரம் செய்திருக்கிறது. அதெல்லாம் பெரிதல்ல; திருமங்கையாழ்வாருடைய திவ்ய ஸூக்திகளை எவ்வளவு ச்ரமப்பட்டுக் கண்டபாடஞ் செய்தாலும் மறப்பின் மிகுதியாலே தரிக்கமுடியாமல் வருந்துகிற எங்களுக்கு எப்படியாவது அந்த ஸ்ரீஸூக்திகளையெல்லாம் தரிக்கும்படியான மனவுறுதியை அருள்செய்ய வேணும்.

குறையல்பிரானடிக்கீழ் விள்ளாதவன்பரான எம்பெருமானார் "கலிமிக்க செந்நெற் கழனிக்குறையல் கலைப்பெருமானொலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்ததனால் வலிமிக்க சீய மிராமாநுசன்" (இராமாநுச நூற்றந்தாதி.)

என்றபடி திருமங்கையாழ்வாரருளிச் செயற்கடலைக் கரைகண்டவராகையால் இங்ஙனே பிரார்த்திக்கப் பட்டாரென்க.

கதி—வடசொல். ‘சங்கா’ என்ற வடசொல் சங்கையென ஐயீறாகத் திரிந்தது. **மறையாயிர மனைத்தும்**=திருமொழியாயிரத்தில் ஒன்றுதப்பாமல் என்றுமாம். ... ... ※

(சில விடங்களில் அநுஸந்திக்கப்படும் தனியன்.)

மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று
கோலிப் பதிவிருந்த கோற்றவனே!—வேலை
அணைத்தருளுங் கையா லடியேன் வினையைத்
துணித்தருள வேணும் துணிந்து.

(இதன் கருத்து.) ஸர்வேச்வரனைத் தனிவழியிலே வழிபறிக்க வேணுமென்று முயற்சிகொண்டு திருவரசடியிலே மறைந்திருந்த திருமங்கைமன்னனே!, வேற்படை யேந்திய திருக்கையாலே அடியேனுடைய பாவங்களைக் கண்டித்தொழிக்கவேணு மென்றதாயிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதல் திருவந்தாதி—தனியன் உரை.

[முதலியாண்டானருளிச் செய்த தனியன்.]

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்
தடியவர்கள் வாழ வருந்தமிழ் நூற்றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

பதவுரை.

கைதை சேர்	தாழைகள் மிகுதியாகச் சேர்ந்திருக்கப்பெற்ற	வாழ	வாழும்படியாகவும்
பூம்பொழில் சூழ்	அழகிய சோலைகளாலே சூழப்பட்ட	படி விளங்க	இப்பூமியானது (இருள்நீங்கி ஞானவொளி பெற்று) விளங்கும்படியாகவும்
கச்சி நகர்	காஞ்சிபுரத்தில் [திருவெஃகாவினருகே]	அரு தமிழ்	அரிய தமிழினலாகிய
வந்து உதித்த	திருவவதரித்த		
பொய்கைப் பிரான்	பொய்கையாழ்வாரென்கிற	நூற்றந்தாதி	அந்தாதித் தொடையாலமைந்த நூறு பாசுரங்களையுடைய பிரபந்தத்தை
கவிஞர் போர் ஏறு	கவிச்ரேஷ்டரானவர்		
வையத்து	இப்பூமண்டலத்திலுள்ள	பரிந்து	அன்புகொண்டு
அடியவர்கள்	பக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள்	செய்தான்	திருவாய் மலர்ந்தருளினர்.

"இன்கவிபாடும் பரமகவிகள்" என்றும் "செஞ்சொற் கவிகள்" என்றும் நம்மாழ்வாராலும், "செந்தமிழ் பாடுவார்" என்று திருமங்கை மன்னனாலும் சிறப்பித்துக் கூறப்பட்டுச் செந்தமிழ்க் கவிகளுள் சிறந்து விளங்குபவரும், திருக்கச்சிமாநகரில் திருவவதரித்தவருமான பொய்கையாழ்வார் தமது திவ்யப்ரபந்த

மாகிற சிறந்த திருவிளக்கையேற்றி அதனால் இந்நிலவுலகம் முழுவதையும் இருள்நீக்கி விளங்கச்செய்து, "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றாற்போல பகவத் பக்தரான ஸ்ரீவைஷ்ணவர்களையும் இப்பிரபந்த முகத்தால் வாழ்வித்தருளினர் என்றதாயிற்று.

கவிஞர்போரேறு=வடநூலார் ச்ரேஷ்டர்களைச் சொல்லும்போது, சிங்கம் புலி எருது முதலிய செருக்குடைய மிருகங்களுக்கு வாசகமான சொற்களைச் சேர்த்து, 'புருஷஸிம்ஹ:' 'புருஷவ்யாக்ர:' 'புருஷபுங்கவ:—புருஷர்ஷப:' என்று பிரயோகிப்பதுபோலவே தமிழரும் பிரயோகிப்பதுண்டாகையாலே "கவிஞர் போரேறு" என்றது கவிகளுட்சிறந்தவரென்றபடி. ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிய திவ்யப்ரபந்தங்களை அதிகரித்தலையே ஸ்ரீவைஷ்ணவர்கள் உஜ்ஜீவநமாக அத்யவஸித்திருப்பது பற்றி 'அடியவர்கள் வாழ' எனப்பட்டது.

"அருந்தமிழ் நூற்றந்தாதி" என்ற பாடத்தில் வெண்டளை பிறழ்கின்றமையால் "அருந்தமிழந்தாதி" என்று பாடமிருக்கவேணும். ஆனாலும், தனியன் வியாக்கியானஞ் செய்தருளின பிள்ளைலோகஞ்சீயர் "அருந்தமிழ் நூற்றந்தாதி" யென்றே ஸ்பஷ்டமாக ப்ரதீக மெடுத்து வியாக்கியானமருளியிருப்பதாலும் இப்பாடமே நாடெங்கும் வழங்கிவரக் காண்கையாலும் இதுவே கொள்ளப்பட்டது.

படிவிளங்க என்பதற்குப் பலவகையாகப் பொருள் கூறுவர்; படி—பூமியிலே, விளங்க—இப்பிரபந்தம் நெடுங்காலம் விளங்கும்படியாக என்றும்; படி என்று உபமாநத்துக்கும் வாசகமாகையாலே, தமிழ்ப் பிரபந்தங்கட்கெல்லாம் உபமாநமாக விளங்கும்படியாக என்றும்; படி என்று திருமேனிக்கும் பெயராகையாலே, "திருக்கண்டேன் பொன் மேனிகண்டேன்" என்று பேயாழ்வார் அநுஸந்திக்குமாறு எம்பெருமானுடைய திருமேனி விளங்கும்படி "வருத்தும் புறவிருள் மாற்ற எம் பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையுங்கூட்டி ஒன்றத் திரித்தன் றெரித்த திருவிளக்கு" என்று இராமாநுசநூற்றந்தா

தியில் அமுதனார் அருளிச்செய்தபடியே திருவிளக்கேற்றியது போன்ற பாமாலையை அருளிச் செய்தாரென்றும் கூறுவர்.

பரிந்து — எம்பெருமான்மேற் காதல்கொண்டு என்கை.

கேதகீ என்னும் வடசொல் 'கைதை' எனவும், காஞ்சீநகரம் என்னும் வடசொல் தொடர் 'கச்சி நகர்' எனவும் திரிந்தன.

கச்சிநகர்வந்துதித்த பொய்கைப்பிரான்.

இத்திருவந்தாதிக்குப் பெரிய வாச்சான்பிள்ளை யருளிச்செய்த வியாக்கியான அவதாரிகைத் தொடக்கத்தில்—

"இன்கவிபாடும் பரமகவிகளென்றும் செந்தமிழ் பாடுவாரென்றும் இவர்கள் அவதரித்தது ஓரோ தேசங்களிலேயாகிலும் காலப் பழமையாலே இன்னவிடமென்று நிச்சயிக்கப் போகாது."

என்றருளிச் செய்திருக்கும் வாக்கியத்தை நோக்குங்கால், பொய்கையாழ்வாரைக் கச்சிநகரில் அவதரித்தவராகவும் பூதத்தாழ்வாரைத் திருக்கடல் மல்லையில் அவதரித்தவராகவும் பேயாழ்வாரைத் திருமயிலையில் அவதரித்தவராகவும் நாம் சொல்லிக்கொண்டிருப்பது அஸங்கதமென்னவேண்டியதாகிறது. மேற்குறித்த வியாக்கியான வாக்கியம் அச்சுப்பிரதிகளிற் காண்கிறபடியே உண்மையாயின், முதலாழ்வார்கள் அவதரித்தது யுகாந்தரத்திலாகையாலே இன்னவிடத்தில் அவதரித்தனர்என்பது நிச்சயிக்கமுடியாத விஷயமென்று பெரியவாச்சான்பிள்ளையின் திருவுள்ளமாக விளங்காநின்றது. இப்படியாகில் முதலாழ்வார்களின் அவதார ஸ்தலங்களை விவரித்துக் கூறுகின்ற திவ்யஸூரிசரிதம், திருவந்தாதித் தனியன்கள், குருபரம்பராப்ரபாவம், பிரபந்தசாரம், உபதேசரத்தினமாலை முதலிய பிரபந்தங்களின் ப்ராமாண்யத்தில் ஸந்தேஹம் ஜநிக்க இடமுண்டாகின்றது. இவ்விஷயத்தை நாம் நன்கு ஆராய்தல் வேண்டும்.

மேலெடுத்துக் காட்டிய வியாக்கியான ஸ்ரீஸூக்தியின் அரும்பதவுரையில்— "இவையிரண்டு ஸங்கதியும் ஸ்வரஸமன்று; பிழையும் தெரியாது; வந்தவிடங்களிலே கண்டுகொள்வது" என்றிருக்

கக்கண்டு பிராசீநதாளகோசங்களைப் பரிசீலனம் செய்ய நாம் தொடங்கினபோது மேற்குறித்த வியாக்கியான வாக்கியத்தின் பிழையற்றபாடம் இங்ஙனே கிடைத்தது:— "இன்கவிபாடும் பரமகவிகள்—சேந்தமிழ்பாவோர்—என்னுமிவர்கள் அவதரித்தது ஓரோதேசங்களிலேயாகிலும் ஞானப்பெருமையாலே இன்னவிடத்தவரென்று நிச்சயிக்கப் போகாதிறே." என்று.

இவ்வாக்கியம் - "ஆழ்வார்களிற் காட்டில் பகவத் விஷயத்திலுண்டான அவகாஹனத்தாலே முதலாழ்வார்கள் மூவரையும் நித்யஸூரிகளோபாதியாக நினைத்திருப்பர்கள்" என்கிற அடுத்த கீழ்வாக்கியத்திற்கு விவரணமாயிருக்கின்றது. இதன் கருத்தாவது:—இவ்வாழ்வார்கள் வந்து திருவவதரித்தது இந்நிலத்திலே ஓரோ விடங்களிலே யாகிலும் இவர்களது ஞான மஹிமையை நோக்குங்கால், "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நம் நிலையிடமே" என்றாற்போலச் சங்கிக்கவேண்டும்படியான நிலைமையாயிருக்கின்றதென்றவாறு. "அத்ரி ஜமதக்நி பங்க்திரத வஸுநந்த ஸூநுவானவனுடைய யுகவர்ணக்ரமாவதாரமோ? வ்யாஸாதிவத் ஆவேசமோ? மூதுவர் கரைகண்டோர் சீரியரிலே ஒருவரோ? முன்னம் நோற்ற அனந்தன்மேற் புண்ணியங்கள் பலித்தவரோவென்று சங்கிப்பர்கள்" (ஆசார்யஹ்ருதயம்.) என்று நம்மாழ்வார் திறத்திலருளிச் செய்தவாற்றை இங்கே நினைப்பது.

முதலாழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களுக்குப் போலவே மற்றுள்ள ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்கட்கும் வியாக்கியான முரைத்தருளின பெரியவாச்சான்பிள்ளை, அவதாரிகைகளிலே அந்தந்த ஆழ்வார்களின் திருவவதார ஸ்தலங்களை அருளிச் செய்திருப்பாராயின், இவ்விடத்திலே 'முதலாழ்வார்களின் அவதார ஸ்தலம் காலப்பழமையாலே தெரியாது' என்றெழுதிவைக்க ப்ரஸக்தியாகிலுமுண்டு; மற்ற ஆழ்வார்களின் அவதாரஸ்தலங்களைப்பற்றி ஒன்றுமருளிச் செய்யாதவர் முதலாழ்வார்களின் அவதாரஸ்தலங்களைப்பற்றி மாத்திரம் பேசத் தொடங்குவதும் காலப்பழமையாலே இன்னவிடமென்று தெரியாதென்பதும் அப்ரஸக்தமாகையாலே அச்சுப்பிழை அங்கீகரிக்கத்தக்கதே. யாமெடுத்துக் காட்

டிய ஏட்டுப்பிரதிகளிற்பாடமே சாலவும் பொருந்தும். முதலாழ்வார்களின் திருவவதாரம் உண்மையில் யுகாந்தரத்திலே யாகிலும் இவர்களது சரிதமும், மற்றும் திருமழிசைப்பிரான் முதலான ஆழ்வார்களின் சரிதமும் வெளிப்பட்ட விதமாகவே இவர்களது திருவவதாரஸ்தலமும் ஸ்ரீமந்நாதமுனிகள் வழியாக வெளிப்பட்டன வென்று கண்டு கொள்க.

காலப்பழமையாலே இவர்களவதரித்த விடம் இன்னதென்று தெரியாதென்றுரைப்பதே பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளமாயிடின் உபதேசரத்தினமாலையிலே "எண்ணருஞ்சீர்ப் பொய்கை முன்னோர் இவ்வுலகில் தோன்றியவூர், வண்மைமிகு கச்சி மல்லை மாமயிலை" என்று * பொய்யிலாத மணவாள மாமுனிகள் அருளிச்செய்தேயிருக்கமாட்டார்; இதனாலும் அச்சுப்பிழை அறுதியிடத்தக்கதாம். ... ... *

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாந்திருவந்தாதி தனியன் உரை.

[திருக்குருகைப்பிரான் பிள்ளானருளிச்செய்த தனியன்.]

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

என்பிறவி தீர விறைஞ்சினே னின்னமுதா
அன்பே தகளி யளித்தானை—நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேருங் கடன்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்.

பதவுரை.

இன் அமுது ஆ	மதுரமான அம்ருதமாக
அன்பே தகளி அளித்தான்	"அன்பே தகளியா" என்று தொடங்கும் திவ்ய ப்ரபந்தத்தை யருளிச் செய்தவரும்
நன் புகழ் சேர்	நல்ல கீர்த்தி சேரப்பெற்று
சீதத்து ஆர் முத்துக்கள் சேரும்	குளிர்ச்சி பொருந்திய முத்துக்கள் சேர்ந்துள்ள
கடல்மல்லை	திருக்கடன் மல்லைத் தலத்தில் திருவவதரித்த
பூதத்தாரை	பூதத்தாழ்வாருடைய
பொன் அம் கழல்	பொன்போலழகிய திருவடிகளை
என் பிறவி தீர	எனது பிறவித்துயர் நீங்கும்படி
இறைஞ்சினேன்	வணங்கினேன்.

* * *—பூதத்தாழ்வாரை வணங்கினால் பிறப்பது மிறப்பதுமாகிற ஸம்ஸாரம் தொலைந்து மோக்ஷம் ஸித்தமாமாகையால் அவரை வணங்கினேனென்கிறார். 1. "தொண்டர்க் கமுதுண்ணச் சொன்

1. திருவாய்மொழி—9—4—9.

மாலைகள் சொன்னேன்" என்னுமாபோலே பக்தாம்ருதமாகத் திருவந்தாதிப் பிரபந்தத்தை அருளிச்செய்தவரும் விலக்ஷணமான திருக்கடல்மல்லைத் திருப்பதியில் திருவவதரித்தவருமான பூதத்தாழ்வாரை வணங்கினே னென்றாராயிற்று. 1. "அமுதன்ன சொன்மாலையேத்தித் தொழுதேன்" என்று இவ்வாழ்வார்தாமே அருளிச்செய்தலால் "இன்னமுதா அன்பே தகளியளித்தான்" என்றது நன்கு பொருந்தும். "அளித்தானை" என்றவிடத்துள்ள இரண்டனுருபு [ஐ] பிரிந்து பூதத்தார் என்றவிடத்துக் கூட்டப்பட்டது; அளித்தானாகிய பூதத்தாரை என்றபடி. பூதத்தாரை—உருபுமயக்கம்; பூதத்தாருடைய என்று பொருள்.

நன்புகழ்சேர் என்பதும் முத்துக்கள்சேரும் என்பதும் கடன்மல்லைக்கு விசேஷணங்கள். தலைசயனத்துறைவாரையும் பூதத்தாழ்வாரையும் தன்னிடத்துக் கொண்டிருப்பதே கடல்மல்லைக்கு நன்புகழாவது. சீதம்—வடசொல்; குளிர்ச்சி. முத்துக்குக் குளிர்ச்சி இயல்பு. முத்துக்கள் என்ற பன்மைக்குச் சேர ஸ்வாரஸ்யமாக ஒரு பொருள் கூறலாம்; மூன்றுவகை முத்துக்கள் இத்தலத்திலுண்டு; கடலில் தோன்றும் முத்து, 2. "வானவரால் வணங்கப்படும் முத்து" என்னப்பட்ட எம்பெருமானாகிற முத்து, இவ்விபூதியிலிருந்துகொண்டே முக்தர் என்னும்படியாகவுள்ள [கரை கடந்த முத்தான] பூதத்தாழ்வாராகிற முத்து—ஆக மூன்று வகை முத்துக்கள் சேருங் கடன்மல்லையாம்.

பூதத்தார்—வடமொழியில் "பூ—ஸத்தாயாம்." [பூ—ஸ்த்தாயாம்] என்கிற தாதுவடியாகப் பிறந்தது பூதம் என்னுஞ் சொல். ஸத்தைபெற்றது என்று பொருள். எம்பெருமானுடைய திருக்குணங்களை யநுபவித்தே ஸத்தைபெற்றாரென்னுங் காரணம்பற்றிப் பூதத்தாழ்வாரென்று திருநாமமாயிற்றென்றுணர்க. திருவாய்மொழியில் (5—2—1) "கடல்வண்ணன் பூதம்" என்றவிடத்து வியாக்கியானங்களில் இப்பொருள் விளங்கக் காண்க. ... *

தனியன் உரை முற்றிற்று.

---

1. இரண்டாந்திருவந்தாதி—85. 2. பெரிய திருமொழி 7-3-8.

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றாந் திருவந்தாதி.

தனியன் உரை.

[குருகைகாவலப்பனருளிச்செய்த தனியன்.]

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

சீராரும் மாடத் திருக்கோவ லூரதனுள்
காரார் கருமுகிலைக் காணப்புக்கு—ஓராத்
திருக்கண்டே னென்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே யுகந்து.

பதவுரை.

சீர் ஆரும் மாடம்	அழகுபொருந்திய மாடங்களையுடைய	திருக் கண்டேன் என்று உரைத்த	'திருக்கண்டேன்' என்று தொடங்கி நூறுபாசுர மருளிச்செய்த
திருக் கோவலூர் அதனுள்	திருக்கோவலூரில்	சீரான்	சீர்மைபொருந்திய பேயாழ்வா ருடைய
கார் ஆர் கரு முகிலை	கார்காலத்துக் காள மேகம்போன்ற எம்பெருமானை	கழலே	திருவடிகளையே
காண புக்கு	ஸேவிக்கப் புகுந்து	நெஞ்சே	எனது நெஞ்சமே!
ஓரா	நெஞ்சென்னும் உட்கண்ணாலே அநுஸந்தித்து	உகந்து உரை	மகிழ்ந்து பேசு;
		(கண்டாய்—முன்னிலையசை.)	

* * *—பேயாழ்வாருடைய திருவடிகளே சரணமென்ற உறுதிகொண்டிருக்குமாறு தமது நெஞ்சுக்கு உபதேசிப்பதாம். ஓடித்திரியும் யோகிகளாய்ப் பதியே பரவித்தொழுந் தொண்டரா யிருந்த முதலாழ்வார்கள் மூவரும் ஒருநாளிரவு ஒன்று கூடினது திருக்கோவலூரிலேயாதலால் "சீராருமாடத்திருக்கோவலூரதனுள்" எனப்பட்டது. திருக்கோவலூராயனைக் கவிபாடுகின்ற திருமங்கையாழ்வார் "மழைமுகிலேபோல்வான் தன்னை" என்றருளிச்செய்ததை உட்கொண்டு 'காரார் கருமுகிலை' எனப்பட்டது. மழைக்காகத் திருக்கோவலிடைகழியிலே ஒதுங்கி அங்கேயொரு மழைமுகிலைக் கண்டுகளித்த பேயாழ்வாருடைய திருவடிகளையே அநுஸந்திக்கவேணுமென்றதாயிற்று. ... ...

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நான்முகன் திருவந்தாதி தனியன் உரை.

[சீராமப்பிள்ளை யருளிச்செய்த தனியன்.]

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

நாராயணன் படைத்தான் நான்முகனை, நான்முகனுக்
கேரார் சிவன்பிறந்தா னென்னுஞ்சொல்—சீரார்
மொழிசெப்பி வாழலாம் நெஞ்சமே!, மொய்பூ
மழிசைப் பரனடியே வாழ்த்து.

பதவுரை.

நெஞ்சமே	மனமே!,	செப்பி	அநுஸந்தித்து
நாராயணன் நான்முகனை படைத்தான்	"நாராயணன் பிரமனை ஸ்ருஷ்டித்தான்,	வாழலாம்	நாம் உஜ்ஜீவிக்கலாம்
நான்முகனுக்கு	அந்தப் பிரமனுக்கு	மொய் பூ மழிசை	செறிந்த பூக்கள் நிரம்பிய திருமழிசையில் திருவவதரித்தருளின
ஏர் ஆர் சிவன் பிறந்தான்	சீர்மைமிக்க சிவன் (புத்திரனாகப்) பிறந்தான்"	பரன்	பக்திஸார முனிவனுடைய
என்னும் சொல்	என்று தெரிவிக்கின்ற பாசுரத்தை முதலிலே உடைத்தான	அடியே	திருவடிகளையே
சீர் ஆர் மொழி	(நான்முகன் திருவந்தாதி யென்கிற) திவ்ய ப்ரபந்தத்தை	வாழ்த்து	வாழ்த்திக் கொண்டிரு.

* * *—நாம் உஜ்ஜீவிக்க வேண்டுமாகில் நான்முகன் திருவந்தாதியை அநுஸந்தித்தே ஆக வேண்டும்; அதாவது—அதனைக் கண்ட பாடம் செய்தல் வேண்டும்; அது செய்யவேண்டில் அப்பிரபந்தத்தைத் திருவாய்மலர்ந்தருளிய திருமழிசைப்பிரானது திருவருள் இன்றியமையாதாதலால் அவ்வருள் பெறுதற்காக அவ்வாழ்வாருடைய திருவடித் தாமரைகளைப் போற்றவேண்டும் என்கிறது இதில்.

தனியன் உரை முற்றிற்று.

தனியன் உரை

கருவிருத்தக் குழிநீத்தபின் காமக் கடுங்குழிவீழ்ந்து
ஒரு விருத்தம் புக்குழலுறுவீர் !, உயிரின் பொருள்கட்
கொருவிருத்தம் புகுதாமல் குருகையர்கோனுரைத்த
திருவிருத்தத் தோரடிகற்றிரீர் திருநாட்டகத்தே.

கரு	கர்ப்பமாகிற	உயிரின் பொருள் கட்கு	(உங்களுடைய) உயிர் அடைதற்குரிய பயன்களுக்கு
விருத்தம் குழி	வட்டமான குழியை	ஒரு விருத்தம் புகுதாமல்	இடையூறு சிறிதும் நேரிடாதபடி
நீத்தபின்	விட்டபின்பு [கர்ப்பத்தில் நின்றும் வெளிப்பட்டுப் பிறந்த பின்பு]	குருகையர் கோன் உரைத்த திருவிருத்தத்து ஓர் அடி கற்று	திருக்குருகூரிலுள்ளார்க்குத் தலைவரான நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தமென்னும் நூலில் ஒரு பாதத்தை அப்யஸித்து உணர்ந்து
காமம் கடு குழி வீழ்ந்து	சிற்றின்பவநுபவமாகிய கொடிய குழியிலேவிழுந்து		
ஒரு விருத்தம் புக்கு	ஒப்பற்ற [மிக்க] கிழத்தனத்தை யடைந்து		
உழலுறுவீர்	அலைந்து கொண்டிருக்கும் ஜனங்களே !	திரு நாடு அகத்தே இரீர்	பரமபதத்தில் வாழ்ந்திருப்பீராக.

• • •—மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து இறந்து ஸம்ஸார ஸாகரத்தில் அலைகின்ற ஜனங்களை நோக்கி 'இனி உங்களை அந்தத் துக்கம் தொடராமல் நீங்கள் மோக்ஷஸாம்ராஜ்யம் பெற்று நித்யாநந்தம் அநுபவிக்க விரும்புகிறீர்களாகில் நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவிருத்தமென்னும் திவ்யப்ரபந்தத்தில் ஓரடியையாவது கற்றுக் கொள்ளுங்கள்' என்று உபதேசிக்கிறார்.

தனியன் உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

தனியன் உரை.

அருளாளப்பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்தது.

[கலி விருத்தம்.]

காசினியோர் தாம்வாழக் கலியுகத்தே வந்துதித்து
ஆசிரியப் பாவதனா லருமறைநூல் விரித்தானைத்
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத் தாரானை
மாசடையா மனத்துவைத்து மறவாமல் வாழ்த்துதுமே.

பதவுரை

காசினியோர் தாம்	பூலோகத்திலுள்ளவர்கள்	திகழ் வகுளம் தாரானை	விளங்குகின்ற மகிழ்மாலையை அணிந்துள்ள வருமான
வாழ	உஜ்ஜீவிப்பதற்காக	பராங்குசனை	நம்மாழ்வாரை
கலியுகத்தே	இக்கலியுகத்தில்	மாசு அடையா மனத்து வைத்து	அஹங்கார மமகாரங்களாகிற குற்றங்களற்ற மனத்திலே வைத்து
வந்து உதித்து	இந்நிலத்தில் வந்து அவதரித்து	மறவாமல்	ஒருகாலும் மறவாமல்
ஆசிரியப்பா அதனால்	திருவாசிரியப் பிரபந்தத்தினால்	வாழ்த்துதும்	மங்களாசாஸநஞ் செய்வோம்.
அரு மறை நூல் விரித்தானை	தெரியவரிதான வேத சாஸ்த்ரங்களை விவரித்த வரும்		
தேசிகனை	ஆசார்யரும்		

—***—இவ்விருள் தருமாஞாலத்திலே ஸம்ஸாரிகளாய்த் தடுமாறுகிற நம்போல்வாரை உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக இக்கலியுகத்திலே இப்பூமண்டலத்திலே வந்து திருவவதரித்துத் திருவாசிரிய

மென்னுமித் திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்து இதன் மூலமாக வேதார்த்தங்களை வெளியிட்டவரும், "ஆத்யஸ்ய ந: குலபதே:" என்று ஆளவந்தாரருளிச்செய்தபடி ஸ்ரீவைஷ்ணவகுல கூடஸ்தராய்க்கொண்டு ப்ரதமாசார்யரும், மகிழ்மாலையை நிரூபகமாகச் சாத்திக்கொண்டிருப்பவரும், புறமதத்தவர்களைக் கண்டித்து ஒழித்ததனாலே பராங்குசர் என்று திருநாமம் பெற்றவருமான நம்மாழ்வாரை நிஷ்கல்மஷமான நெஞ்சிலேவைத்து நித்தியம் வாழ்த்துவோமென்றதாயிற்று.

பராங்குசன் என்பதற்கு மாஞானிகள் சொல்லும் அர்த்தமும் ஒன்றுண்டு; பரர்கட்கு அங்குசம் [மாவட்டி] போன்றவர்,—மதாந்தரஸ்தர்களை அடக்குகிறவர் என்கிற பொருள் ஒருபுறமிருக்கட்டும். பரன் என்று பரமபுருஷனை எம்பெருமானைச் சொல்லுகிறது. அவனைத் தம்முடைய ஸ்ரீஸூக்திகளாகிற மாவட்டியினால் வசப்படுத்திக்கொள்ளவல்லவர் என்கை. * "வலக்கையாழி இடக்கைச் சங்கமிவையுடை மால்வண்ணனை, மலக்கு நாவுடையேற்கு" என்று தாமே அருளிச்செய்தார். சில குத்ருஷ்டிகள் மறைகுலையச் சாதுசனங்களடங்கத் தருக்கச் செருக்காலே எம்பெருமானுடைய பரத்வத்தை இல்லைசெய்தவளவிலே ஸர்வேச்வரன் அதுகண்டு நடுங்கி 'நான் பரதத்வமல்லேன், நான் பரதத்வமல்லேன்' என்று பின் வாங்க, ஆழ்வார் "ஒன்றுந்தேவுமுலகும்" என்கிற திருவாய்மொழியாகிற மாவட்டியையிட்டு அவ்வெம்பெருமானாகிற களிற்றை ஓடவொட்டாதே நிலைநிறுத்திப் பரத்வஸ்தாபனம் பண்ணினபடியாலே பராங்குசரென்கிறது என்று கருத்து.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

* திருவாய்மொழி 6-4-9

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரிய திருவந்தாதி—தனியன் உரை.

[எம்பெருமானார் அருளிச் செய்த தனியன்.]
(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

முந்துற்ற நெஞ்சே! முயற்றி தரித்துரைத்து
வந்தித்து வாயார வாழ்த்தி—சந்த
முருகூருஞ் சோலைசூழ் மொய்பூம் பொருநல்
குருகூரன் மாறன்பேர் கூறு.

பதவுரை.

முந்துற்ற	(சில விஷயங்களில்) முற்பட்டுச் செல்லுகிற	முருகு ஊரும் சந்தச்சோலை சூழ்	தேன் பெருகுகின்ற சந்தனச் சோலைகள் சூழ்ந்ததும்
நெஞ்சே	ஓ மனமே!,		
முயற்றி தரித்து	(நான் இப்போது உனக்கு உரைக்கும் விஷயத்தில்) உத்ஸாகத்தைக் கொண்டு	மொய் பூ பொருநல்	நெருங்கிய அழகிய தாமிரபர்ணி நதியை யுடையதுமான
உரைத்து	(என் நிலைமையை) ஆழ்வாரிடத்து விஞ்ஞாபித்து	குருகூரன்	திருநகரிக்குத் தலைவரான
வந்தித்து	தண்டன் ஸமர்ப்பித்து	மாறன்	நம்மாழ்வாருடைய
வாய் ஆர வாழ்த்தி	வாய்படைத்தது ஸபலமாம்படி வாழ்த்தி,	பேர்	திருநாமங்களை
		கூறு	நீ சொல்லு.

* * *—மாறனடி பணிந்துய்ந்தவரான இராமாநுசன் தனது திருவுள்ளத்தை நோக்கி 'நெஞ்சே! நீ ஆழ்வாருடைய திவ்யப்ரபந்தத்தைச் சொல்லுவதும் அவருடைய திருநாமங்களைச் சொல்லுவதுமாயிரு' என்று உபதேசிக்கிறார். முயற்றியாவது முயற்சி; வணக்கம் வந்தித்தல்-வணங்குதல். வாயாரவாழ்த்தி என்ற பாடத்தில் வெண்டளை பிறழ்கின்றமையால் "வாயார வாழ்த்தியே" என்று பாடமிருந்திருக்க வேணும்.

முயற்றி தரித்து என்பதற்கு—முயற்றி என்னுஞ் சொல்லை முதலிலே வைத்து ஆழ்வார் அருளிச் செய்த பிரபந்தத்தைத் தரித்துக் கொண்டு என்று பொருள் கொள்ளுதலும் சிறக்கும். "முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே" என்றிறே இப்பெரிய திருவந்தாதியின் தொடக்கம். ... ...

ஸ்ரீ:

சிறிய திருமடலின் தனியன்.

(பிள்ளை திருநறையூரரையர் அருளிச்செய்தது.)

நேரிசை வெண்பா.

முள்ளிச் செழுமலரோர் தாரான் முளைமதியம்
கொள்ளிக்கென் னுள்ளங் கொதியாமே—வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி
மருவாளன் தந்தான் மடல்.

பதவுரை.

செழு முள்ளி மலர் ஓர் தாரான்	செழுமை தங்கிய முள்ளி மலர்களினாலாகிய ஒப்பற்றமாலையை அணிந்து கொண்டிருப்பவரும்,	கார் கலியை வெட்டி	அஜ்ஞாநதோஷத்தை ஒழித்தவருமான
வள்ளல்	(ஸ்ரீஸூக்திகளை அளவறத் தந்தருளுகையாலே) மிக்க உதாரரும்,	சீர்கலியன்	ஸ்ரீ திருமங்கையாழ்வார்
திரு ஆளன்	ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயை ஆள்பவரும்	முளை மதியம் கொள்ளிக்கு என் உள்ளம் கொதியாமே	உதிக்கின்ற சந்திரனாகிய கொள்ளியிலே என் நெஞ்சு பரிதபியாதபடிக்கு
மரு வாளன்	பொருந்திய வாளையுடையவரும்	மடல்தந்தான்	திருமடல் பிரபந்தத்தை அருளிச் செய்தார்.

* * *—முளைத்தெழுகின்ற சந்திரனை விரஹிகள் கண்டவாறே 'இவன் சந்திரனல்லன், சண்டனேயாவன்' என்று நிச்சயித்துக் கொள்ளியைக் கண்டாற்போலே குடல் குழம்பிக் கொதிப்பர்கள்; அப்படி கொதிக்கவேண்டாதபடி திருமங்கையாழ்வார், விரஹதாபஹரமான இத்திருமடலெனும் திவ்யப்பிரபந்தத்தைத் தந்தருளினார் என்கிறது. உலகத்தில் விஷயாந்தரங்களில் ஈடுபட்டவர்கள்

தம் அபிமத விஷயத்தைப் பிரிந்து "చన్ద్రశ్చణ్డకరాయతే" [சந்த்ரச் சண்டகராயதே] என்று சந்திரனைக்கண்டு எப்படி தாபமெய்துவார்களோ, அப்படியே பகவத் விஷயத்தி லீடுபட்டவர்களும் எம்பெருமானாகிற தலைம்களைப் பிரிந்தகாலத்து, சந்திரனைக் கொள்ளியாகவே கருதித் தபிக்கப் பெறுவர்களென்பதை "போந்த வெண்திங்கள் கதிர்சுடமெலியும்" என்ற இவ்வாழ்வார் பாசுரத்தாலும்; "மேவுதண்மதியம் வெம்மதியமாலோ" என்ற நம்மாழ்வார் பாசுரத்தாலும் அறிக. இங்கு முளைமதியமென்று சந்திரனை எடுத்துக்கூறியது—விரஹத்தில தாபத்தை விளைக்கவல்ல * மல்லிகை கமழ் தென்றல்முதலிய மற்றெல்லாப் பொருள்கட்கும் உபலக்ஷணமென்க. இனி நாம் எம்பெருமானைப் பிரிந்து சந்திரன் முதலிய பல பாதக (బాధక) பதார்த்தங்களினால் வருந்தவேண்டாதபடி ஆழ்வார் திருமடலை நமக்கு உபகரித்தார் என்றவாறு. எனவே, இத்திருமடலை ஒருகால் அநுஸந்தித்தவாறே எம்பெருமான் அஞ்சி நடுங்கி அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து முகங்காட்டியருள்வானாகையாலே பகவத் விரஹமும் விரஹதாபமும் ஒன்றும் நமக்கு நேரிட ப்ரஸக்தியில்லை யென்றதாயிற்று.

திருமங்கையாழ்வாரைப்போலவே கனத்த பகவத்காமமுடையவரால் இப்பாசுரம் அருளிச் செய்யப்பட்டதாகக் கொள்க.

முள்ளிச் செழுமலரோர்தாரான்—கலியனுக்கு முள்ளிப்பூமாலை ஜாதிக்கு ஏற்ற மாலை போலும். இப்போது அர்ச்சாவதாரத்தில் (திருநகரியில்) முள்ளிச்செழுமலர்த்தார் வடிவமான திவ்யாபரணம் ஸ்வர்ணமயமாக உள்ளமை உணர்க.

தாமரை என்னும் பொருளதான முளரி என்னுஞ் சொல் முள்ளியென மருவிற்றென்று கொண்டு தாமரை மாலையை யணிந்துள்ளவரென்று பொருள் கூறுவாருஞ் சிலருளர்.

"மலரோ தாரான்" "மலரோர்தாரான்" "மலரோன் தாரான்" என்பன பாட பேதங்கள்.

மதியம்=அம்—சாரியை. [கார்க்கலியை வெட்டி.] கார்—இருள்; அதாவது அஜ்ஞானம். வெட்டி என்பதை வினையெச்சமாகக் கொண்டு உரைத்தலு மொன்று.

தனியன் உரை முற்றிற்று.

பெரிய திருமடலின் தனியன்.

(பிள்ளை திருநறையூரரையர் அருளிச் செய்தது.)

நேரிசை வெண்பா.

பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றிசெய்யும்
நன்னுதலீர் நம்பி நறையூரர்—மன்னுலகில்
என்னிலைமை கண்டு மிரங்காரே யாமாகில்
மன்னு மடலூர்வன் வந்து.

நல் நுதலீர்	அழகிய நெற்றியையுடைய மாதர்காள் !,
பொன் உலகில் வானவரும்	பரமபதத்திலுள்ள நித்யஸூரிகளும்
பூ மகளும்	தாமரைப்பூவிற் பிறந்த பிராட்டியும்
போற்றி செய்யும்	ஸ்தோத்திரம் செய்யப்பெற்ற
நறையூரர்	திருநறையூரில் எழுந்தருளியிருப்பவனும்
நம்பி	கல்யாண குணபரிபூர்ணனுமான எம்பெருமான்
மன் உலகில்	ப்ரவாஹதோ நித்யமான இந்நிலத்தில்
என் நிலைமை கண்டும்	எனது அவஸ்தையைக் கடாக்ஷித்தும்
இரங்கார் ஆம் ஆகில்	க்ருபை செய்தருளாவிடில்
வந்து	திருப்பதிகள் தோறும் வந்து
மன்னு மடல் ஊர்வன்	நித்தியம் மடலூர்ந்துகொண்டேயிருப்பேன்.

* * *—இது ஆழ்வாருடைய பாவனையாகவே பேசின பாசுரம். ஆழ்வாருடைய திருநாமத்தைச் சொல்லி வணங்குதல், அவர் அவதரித்த ஊரைச் சொல்லிப் புகழ்தல், அவர் அருளிய ஸ்ரீஸூக்தியின் பெருமையையோ உட்கருத்தையோ எடுத்துரைத்தல் ஆகிய இவை பெரும்பாலும் தனியன்களில் வரும். இத்தனியன் அங்ஙனல்லாமல் ஆழ்வார் பிரபந்தம் பேசுகிற பாவனையாகவே அமைந்துளதென்பதும், இதனால் இத்தனியன் அருளிச்செய்த ஆசிரியர்க்கு ஆழ்வாருடைய த்யாநம் முற்றி பாவநாப்ரகர்ஷத்தால் தந்மயத்வம் உண்டாயிற்றென்பதும் அறியத்தக்கன.

நன்னுதலீர்! என்கிற ஸம்போதநம்—ஸ்த்ரீபாவமடைந்த ஆழ்வார் [பரகால நாயகி] தோழிகளை நோக்கி விளிப்பதாகக் கொள்க. பரமபதவாஸிகளான நித்யஸூரிகளும் பெரிய பிராட்டியாரும் வந்து மங்களாசாஸநம் செய்யப்பெற்ற திருநறையூரெம்பெருமான் என் ஆற்றாமையைக் கண்டும் ஓடிவந்து கலவி செய்தருளாவிடில் மடலூர்வது தவிரமாட்டேனென்கை. பொன்னுலகு என்று ஸ்வர்க்க லோகத்தைச் சொல்லவுமாம். பூமகனும் என்றும் பாடமுண்டு; பூவிற் பிறந்த பிரமனும் என்றபடி.

போற்றி—இகரவிகுதிபெற்ற தொழிற்பெயர்; இனி, போற்றி செய்யும் என்பதற்கு—போற்றி என்ற சொல்லைக்கொண்டு வாழ்த்தப்பெற்ற எனினுமாம்: இப்பொருளில் போற்றி என்பது போற்றிய என்னும் வியங்கோளின் அநுகரணம்; ஈறு தொக்கு வந்ததென்க.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழித் தனியன்கள்.

(ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிச்செய்தது.)

𑌭𑌕𑍍𑌤𑌾𑌮𑍃𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑌨𑌾𑌨𑍁𑌮𑍋𑌦𑌨𑌂
𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌦𑌂 𑌶𑍍𑌰𑍀𑌶𑌠𑌕𑍋𑌪𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌮𑍍 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌾𑌖𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑌮𑌾𑌗𑌮𑌂
𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌵𑍇𑌦𑌸𑌾𑌗𑌰𑌮𑍍 ॥

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்,
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்.

பதவுரை.

பக்த அம்ருதம்	தொண்டர்கட்கு அமுதமா யிருப்பதும்	ஸ்ரீசடகோப வாங்மயம்	நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்தி மயமுமான
விச்வ ஜந அநுமோதநம்	ஸகல ஜனங்களையும் ஆனந்திக்கச் செய்வதும்	த்ராவிட வேத ஸாகரம்	தமிழ் வேதக் கடலை
ஸர்வ அர்த்ததம்	ஸமஸ்த புருஷார்த்தங்களையும் அளிக்கவல்லதும்	அஹம்	அடியேன்
ஸஹஸ்ர சாக உபநிஷத் ஸமாகமம்	ஆயிரக்கணக்கான சாகைகளையுடைய உபநிஷத்துக்களின் திரட்சியாயிருப்பதும்	நமாமி	ஸேவிக்கிறேன்.

• • •—திருவாய்மொழி ஒரு கடலாக ரூபணம் செய்யப்படுகின்றது. கடலுக்குள்ள தன்மைகளடங்கலும் திருவாய்மொழிக்குமுண்டென்று ஐந்து விசேஷணங்களினால் நிரூபிக்கப்படுகின்றது. [பக்தாம்ருதம்.] உலகிற்காணும் கடலானது பண்டொருகால் • வங்கக் கடல்கடைந்த மாதவனாலே கடையப்பட்டுத் தேவர்கட்கு அமுதமளித்தது ஆகையாலே பக்தர்களான தேவர்கட்கு அது அமுதமாயிருந்தது; திருவாய்மொழியோ வென்னில்; "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றும் "பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்றும் ஆழ்வார் தாமே அருளிச்செய்தபடியே அநந்ய ப்ரயோஜனர்களான பாகவதர்கட்கு நித்ய போக்யமான அமுதமாயிருக்கும். "வைகல் பாடவல்லார் வானோர்க்கு ஆராவமுதே" என்கிறபடியே திருவாய்மொழியைப் பாடுமவர்களே வானோர்க்கு ஆராவமுதமாகும்போது அந்தத் திருவாய்மொழி ஆராவமுதமாகச் சொல்லவேணுமோ?

[விச்வஜந அநுமோதநம்] கடலைக் கண்டு களியாத ஜனங்களில்லை. பலர் எத்தனை தடவை கண்டாலும் ஆராதே அபூர்வ வஸ்துவாகி ஸந்தோஷஜநகமாயி

ருக்கும் கடல்; திருவாய்மொழிதானும் அப்படியே காணும். "என்காவின் கனி" என்றும் "பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்றும் "ஆமுதல் பத்தர்க்கு" என்றும் "கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே" என்றும் "தென்னனென்னுமென்னம்மான் திருமாலிருஞ் சோலையானே" என்றும் "பார்பாலின்கனி" என்றும் சொல்லுகிறபடியே ஆழ்வாரோடு மற்றையாரோடு வாசியறவும் நித்யஸூரிகளோடு நித்ய ஸம்ஸாரிகளோடு வாசியறவும் ஸர்வேச்வரனோடு தச்சேஷபூதர்களோடு வாசியறவும் எம்பெருமானோடேகூட உபய விபூதியும் புஜிக்கைக்கு உரியதாகையாலே விஶ்வாஸ்வாவாவுனை எம்பெருமானுக்கும் மற்றுமுள்ள ஜனங்களுக்கும் அநுமோதகமாயிருக்கும்-

[ஸர்வார்த்ததம்] கடல் ரத்நாகரமாகையாலே சிறந்த பொருள்களையெல்லாம் தன்னுள்ளே அடக்கிக்கொண்டிருந்து தன்னிலே அவகாஹித்து எடுத்தாள வல்லவர்கட்குத் தந்து உபகரிக்கும். திருவாய்மொழி தானும் ஸகல புருஷார்த்தங்களையுமளிக்கும். "குருகூர்ச்சடகோபன் சொன்ன பாடலோராயிரத்துள் இவையுமொருபத்தும் பயிற்ற வல்லார்கட்கு, அவன் நாடு நகரமும் நன்குடன் காணக் கலவின பூர்த்திபண்ணி, வீடும் பெறுத்தித் தன் மூவுலகுக்குந் தருமொரு நாயகமே" என்கிறபடியே திருவாய்மொழி அளிக்கமாட்டாத புருஷார்த்தமில்லையென்க. "மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி" என்கிறபடியே முமுக்ஷுக்களுக்கு அவசியமறியவேண்டிய வேதாந்த நுட்பொருள்களையெல்லாம் சுரக்கும்படியைச் சொல்லுகிறதாகவுமாம்.

[ஸ்ரீசடகோபவாங்மயம்] கடலானது ஒருகால் அகஸ்திய மஹாமுனியின் வாயில் நுழைந்து புறப்பட்டதாகையாலே அது அகஸ்த்ய வாங்மயமாயிருக்கும். திருவாய்மொழி குருகூர்ச் சடகோபன் சொல்மாலையாயிருக்கும். 'ஆழ்வாரருளிச்செயல்' என்னுமத்தனையே ஏற்றத்திற்கு உடலென்க. • காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து நிமூடு நின்று தவஞ்செய்த ரிஷிகளிற்காட்டில் • உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனெம்பெருமானென்றே கண்கள் நீர்மல்கிக் கிடந்த ஆழ்வார்க்கு வெவ்வாசியுண்டே.

[ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்.] • தொக்கிலங்கியாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலேபுக்கன்றிப் புறம் நிற்கமாட்டாதாகையாலே நதிகள் கடலிலே புகும்போது பலபல மரங்களையும் அடித்துக்கொண்டே போய்ப் புகுமாகையாலே கடலானது ஆயிரக்கணக்கான சாகைகளின் [கிளைகளின்] சேர்க்கையைப் பெற்றிருக்கும். திருவாய்மொழியோவென்னில், ஸஹஸ்ரசாகைகளையுடைத்தான உபநிஷத்துண்டு — ஸாமவேத ஸாரமான சாந்தோக்ய உபநிஷத்து. அத்தோடே ஸமமான ஆகம [வேத]மாக இருக்கும். அநேக சாகைகளையுடையன வான உபநிஷத்துக்களெல்லாம் திரண்ட திரட்சியாயிருக்கும் திருவாய்மொழி என்னவுமாம். ஆக இப்படிப்பட்ட பொருத்தங்களாலும் உள்ளாழமறியக்

கூடாமையினாலும் கடல் என்று சொல்லத் தகுந்ததான தமிழ் வேதத்தை நமஸ்கரிக்கிறேனென்றதாயிற்று.

த்ராவிட வேதஸாகரத்தை அவகாஹிக்கிறேன் என்னாமல் நமஸ்கரிக்கிறேன் என்றது — 'வந்தே ராமாயணார்ணவம்" [ஸ்ரீராமாயணமாகிற ஸமுத்ரத்தை நமஸ்கரிக்கிறேன்] என்று சொன்னதை அடியொற்றி யென்பர். "ச்லோக ஜால ஜலாகீர்ணம் ஸர்க்க கல்லோல ஸங்குலம் | காண்டக்ராஹ மஹாமீநம் வந்தே ராமாயணார்ணவம் = ச்லோக ஜால ஜலாகீர்ணம் ஸர்க்க கல்லோல ஸங்குலம் — காண்டக்ராஹ மஹாமீநம் வந்தே ராமாயணார்ணவம்" என்றது காண்க. ச்லோகங்களாகிற ஜலம் நிரம்பியும், ஸர்க்கங்களாகிற அலைகள் நிறைந்தும், காண்டங்களாகிற முதலைகளும் பெருமீன்களும் மலிந்து மிருக்கின்ற ஸ்ரீராமாயண ஸமுத்ரத்தை நமஸ்கரிக்கிறேனென்றது. அது இருபத்தினாலாயிரம் ச்லோகமாயிருக்கும். இது நீர்த்தங்களாயிரமான * சீர்த்தொடையாயிரமாயிருக்கும். அதில் ஐந்நூறு ஸர்க்கமாயிருக்கும்; இது பத்து நூறாயிருக்கும். அது ஆறு காண்டமாயிருக்கும்; இது ஷட்பதத்தின் (த்வயத்தின்) அர்த்தத்தைப் பேசுகின்ற பத்துப் பத்தாயிருக்கும். அது ராமாயணார்ணவம், இது த்ராவிட வேதஸாகரம். அது ரகுவம்ச சரிதம்; இது முகில்வண்ணனடிமேற் சொன்ன சொல்மாலை அது வால்மீகிமஹர்ஷிப்ரோக்தம்; இது ஸ்ரீசடகோப மஹர்ஷி ஸாக்ஷாத்க்ருதம் அது * மஹாபாதக நாசகம்; இதுவும் * அருவினை நீறுசெய்யும். அது "[illegible]" என்கிறபடியே மோக்ஷப்ராபகமாயிருக்கும்; இதுவும் "வானின்மீதேற்றி யருள்செய்து முடிக்கும் பிறவிமா மாயக்கூத்தினையே" என்று திருவடியேயடைவிக்கும். ... ... (•)

ஈச்வரமுனிகளருளிச்செய்த தனியன்.

திருவழுதி நாடென்றுந் தென்குருகூரென்றும்
மருவினிய வண்பொருநலென்றும் — அருமறைகள்
அந்தாதி செய்தா னடியிணையே யெப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

பதவுரை.

நெஞ்சே	மனமே !,	அரு மறைகள்	அருமையான வேதங்களை
திருவழுதி நாடு என்றும்	திருவழுதி நாடென்கிற தேசத்தை அநுஸந்தித்தும்	அந்தாதி செய்தான்	அந்தாதித் தொடையான திருவாய்மொழி முகத்தாலே பாடின ஆழ்வாருடைய
தென் குருகூர் என்றும்	அழகிய திருக்குருகூரென்கிற திவ்யதேசத்தை அநுஸந்தித்தும்	அடி இணையே	உபய பாதங்களையே
மருவு இனிய வண் பொருநல் என்றும்	ஆசைப்படும்படி போக்யமாய் அழகியதான தாமிரபர்ணியாற்றை அநுஸந்தித்தும்,	எப்பொழுதும்	இடைவிடாமல்
		தெளிந்து	தெளிவுடனே
		சிந்தியாய்	சிந்தை செய்யக்கடவை.

• • • — ஆழ்வாருடைய திருவடிகளை அநுஸந்திக்கும்போது அவரது திருவவதார ஸ்தலமான திருநகரியையும், அது இருக்கும் நாடாகிய வழுதிவளநாட்டையும், அந்நாட்டுக்கு அலங்காரமாய் ஆழ்வார்க்குப் புராண நிரூபகமுமான தாம்ரபர்ணீ திவ்ய நதியையும் அநுஸந்தித்துப் பின்பு 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்னவேணுமென்கிறது. இதனால் உத்தேச்ய வஸ்துவின் ஸம்பந்த ஸம்பந்தம்பெற்ற வஸ்துக்களும் உத்தேச்யம் என்கிற சாஸ்த்ரார்த்தம் வெளியிடப்பட்டதாகும். எம்பெருமான் சேவடியை அநுஸந்திக்குமவர்கள் • வைகுந்த வானாட்டையும் • இறந்தால் தங்குமூரான கண்ணன் விண்ணூரையும் • அமுத விரஜையாற்றையும் அநுஸந்திக்குமாபோலே.

“வாய்ந்த வழுதிவளநாடன் மன்னு குருகூர்ச் சடகோபன்” என்றும் “நல்லார் நவில் குருகூர்நகரான்” என்றும் “பொருநற் செங்கணிதுறைவன்” என்றும் நாட்டையும் ஊரையும் ஆற்றையும் தமக்கு நிரூபகமாக ஆழ்வார் தாமே அருளிச்செய்திருக்கையாலே அம் மூன்றையும் அநுஸந்திக்கச் சொல்லிற்று.

தெளிந்து = ஆழ்வார் திருவடிகளே உபாயமும் உபேயமும் என்கிற தெளிந்த அத்யவஸாயங்கொண்டு என்றபடி. ... ... (*)

சொட்டைநம்பிகளருளிச்செய்த தனியன்.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை யல்லா திறைஞ்சேன் — தனத்தாலும்
ஏதுங் குறைவிலேன் எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று.

பதவுரை.

மனத்தாலும்	நெஞ்சினாலும்	ஏதும் குறைவு இலேன்	எவ்விதமான குறையுமுடையேனல்லேன்; (எதனாலென்னில்)
வாயாலும்	வாக்கினாலும்	எந்தை சடகோபன்	அஸ்மத் ஸ்வாமியான நம்மாழ்வாருடைய
வண் குருகூர் பேணும்	திருநகரியை ஆதரிக்கின்ற	பாதங்கள்	திருவடிகள்
இனத்தாரை அல்லாது	கோஷ்டியில் சேர்ந்தவர்களைத் தவிர (மற்றையோர்களை)	யாமுடைய	நம்முடைய
இறைஞ்சேன்	வணங்கமாட்டேன்;	பற்று	ஆதாரமாயிராநின்றது.
தனத்தாலும்	செல்வத்தினாலும்		

• • • — ஆழ்வார் திருநகரியையே போற்றிக்கொண்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் அந்வயித்த மஹான்களைத்தவிர மற்று எவரையும் வணங்கமாட்டேனென்றது, எப்போதும் அப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ சிகாமணிகளையே வணங்குவேனென்றபடி.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணுகையாவது — “திருக்குருகூரதனை உளங்கொள் ஞானத்து வைம்மின்” என்றும் “திருக்குருகூரதனைப் பாடியாடிப் பரவிச்செல்மின்கள்” என்றும் ஆழ்வார் உபதேசித்தருளினபடியே திருக்குருகூரை நெஞ்சாலே சிந்தித்தும் வாயாலே சொல்லியும் போருகை. மன

மொழிவிரண்டைச் சொன்னது மூன்றுவதான சரீரத்திற்கும் உபலக்ஷணம் என்று சிலர் கொள்வர். திருநகரியைச் சென்றடைதல் மெய்யினால் பேணுத லாகும். திருக்குருகூரை நெஞ்சினால் நினைந்து வாயினால் மொழிதலே போதும், சென்று சேவிக்கவேணுமென்னும் நிர்ப்பந்தமில்லை என்பது இத்தனியனருளிச் செய்தவரின் திருவுள்ளமென்ப. "பேணுமினத்தாரை" என்றது, பேணுமிறவர் களின் ஜாதியைச் சேர்ந்தவர்களெல்லாரையும் குறிக்கும்.

ஆழ்வார் திருவடிகளே தமக்குத் தஞ்சமென்றும் அவையே தமக்கு வை த்தமாநிதி யென்றும் பின்னடிகளிற் சொல்லுகிறது. ஆழ்வார் திருவடிகளை ஆச்ரயிக்கப்பெற்ற நமக்கு இனியொரு குறையுமில்லை யென்கிறார். எம்பெரு மானை ஆச்ரயித்தவர்கள் "தநம் மதீயம் தவ பாதபங்கஜம் — தநம் மதீயம் தவ பாதபங்கஜம்" என்று அவனது திருவடிகளையே தமக்குச் செல்வமாக நினைத்திருப்பதுபோல, ஆழ்வாரை ஆச்ரயித்தவர்கள் "விபூதிஸ் ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் — விபூதில் ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்" என்று ஆழ்வார் திருவடிகளையே ஸகலைச்வர்யமாக நினைத்திருப்பார் களையே 'தனத்தாலு மேதுங் குறைவிலேன்" என்றது.

தநம் என்னும் வடசொல் தனமெனத் திரிந்தது. எந்தை - என் தந்தை.

முன்னடியில் இறைஞ்சேன் என்று ஒருமையாகச் சொல்லிப் பின்னடியில் எமுடைய என்று பன்மையாகச் சொன்னது, இயல்புபற்றிய தனித்தன்மைப் பன்மை; ஸ்வஸம்பந்திகளையும் கூட்டிக்கொண்டு பேசுகிறாரென்னவுமாம் ....(*)

அநந்தாழ்வானருளிச்செய்த தனியன்.

ஏய்ந்த பெருங்கீர்த்தி யிராமானுச முனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன் — ஆய்ந்தபெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ்வே தந்தரிக்கும்
பேராத வுள்ளம் பெற.

பதவுரை.

ஆய்ந்த	குற்றம் கலசாதும்
பெருசீர்	சிறந்த திருக்குணங்களி னால்
ஆர்	பரிபூர்ணரான
சடகோபன்	நம்மாழ்வார் அருளிச் செய்த
செந்தமிழ் வேதம்	செவ்விய தமிழ் வேதத் தை
தரிக்கும்	தாங்கிக்கொள்ளவல்லதாய்
பேராத	வேறொன்றில் செல்லமா ட்டாததான

உள்ளம்	நெஞ்சை
பெற	பெறும் பொருட்டு,
ஏய்ந்த பெரு கீர்த்தி இராமா நுச முனி தன்	தகுதியான பெரும்புகழை யுடைய எம்பெருமா னாரது
வாய்ந்த பாதம் மலர்	பொருத்தமான திருவடித் தாமரைகளை
வணங்குகின்றேன்	வணங்குகின்றேன்.

. . . — மேல் தனியனில் "தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல்தாய் சட கோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" என்னப்படுதலால்

திருவாய்மொழியை வளர்த்தவரான எம்பெருமானாருடைய திருவருளின்றித் திருவாய்மொழியை மனப்பாடமாகத் தரிக்கவல்ல சக்தி வாய்க்கமாட்டாதாதலால், செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெறுதற்காக இராமாநுசனது மலர்ப்பாதம் வணங்குகின்றேனென்கிறது இதில்.

எம்பெருமானார் தாம் * மாறனடிபணிந்துய்ந்த விராமாநுசனாய் * மாறன் பணித்த மறையுணர்ந்தோனாய் *தென்குருகைப்பிரான் பாட்டென்னும் வேதப் பசுந்தமிழ்தன்னைத் தன்பத்தியென்னும் வீட்டின்கண்வைத்த விராமாநுசனாய் * பண்டரு மாறன் பசுந்தமிழானந்தம்பாய்மதமாய் விண்டிடும் வேழமாய் * திருவாய்மொழியின் மணந்தரு மின்னிசை மன்னு மிடந்தொறும் புகுந்து நிற்கும் குணந்திகழ் கொண்டலாய் * உறுபெருஞ் செல்வமுந் தந்தையுந் தாயும் உயர்குருவும் வெறிதரு பூமகள்நாதனும் மாறன் விளங்கியசீர் நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிருப்பாராய் (நூற்றந்தாதியில்) ப்ரஸித்தராகையாலே, திருவாய்மொழியைத் தரிக்கும் நெஞ்சு பெறுதற்கு அவரைப் ப்ரார்த்தித்தல் பொருந்துமென்க. இப்படிப்பட்ட அர்த்தாங்க பக்தராகையாலன்றோ ஆழ்வாரது திருவடிநிலைக்கு இராமாநுசன் என்றே திருநாமம் வழங்கிவருவது ஸம்ப்ரதாயமாயிற்று.

"எங்கள் கதியே யிராமாநுசமுனியே, சங்கைகெடுத்தாண்ட தவராசா, பொங்குபுகழ் மங்கையர் கோனீந்த மறையாயிரமனைத்தும், தங்குமனம் நீயெனக்குத்தா" என்ற பெரிய திருமொழித் தனியனையும் இங்கு ஸ்மரிப்பது. .... (௪)

பட்டர் அருளிச்செய்த தனியன்.

வான்திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும் — ஈன்ற
முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தா யிராமா னுசன்.

பதவுரை.

வான் திகழும் சோலை	ஆகாசத்தளவும் ஓங்கி விளங்குகின்ற சோலைகளையும்	தமிழ் மறைகள் ஆயிரமும்	தமிழ் வேதமான ஆயிரம் பாசுரங்களையும்
மதிள்	ஸப்த ப்ராகாரங்களையும் உடைத்தான	ஈன்ற முதல் தாய்	பெற்ற முக்கியமான மாதா
அரங்கர்	திருவரங்கத்தில் பள்ளி கொண்ட எம்பெருமானுடைய	சடகோபன்	நம்மாழ்வாராவர்;
		மொய்ம்பால்	மிடுக்குடனே
		வளர்த்த	அதனை வளர்த்த
வண் புகழ் மேல் ஆன்ற	திருக்கல்யாண குண விஷயமாக அமைந்த	இதம் தாய்	ஹிதமான மாதா
		இராமாநுசன்	எம்பெருமானாராவர்.

* * * — இந்தத் தனியனிலே "செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெற — இராமாநுசமுனிதன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்" என்று பேசும்படி எம்பெருமானார்க்கும் திருவாய்மொழிக்குமுள்ள தொடர்பை

வெளியிடுவது இப்பாசுரம். உலகத்தில் ப்ரஜைகளுக்குப் பெற்றதாய் என்றும் வளர்த்ததாய் என்றும் இரண்டு தாய்மார் ஏற்படுவதுபோல் திருவாய்மொழியாகிற ப்ரஜைக்கும் இரண்டு தாய்மாருண்டு; அவர்களாகிறார் நம்மாழ்வாரும் எம்பெருமானாரும். ஆழ்வார் பெற்றருளினார்; எம்பெருமானார் போஷித்தருளினார். கண்ணபிரானுக்கு தேவகிப்பிராட்டியும் யசோதைப்பிராட்டியும் போலே.

ஈன்ற தாய் பெற்றுப் போகட்டுப்போனாலும் வளர்க்குந்தாய் தன் மிடுக்காலே காத்து நோக்குமாபோலே எம்பெருமானார் திருவாய்மொழியைக் காத்தருளினவாறு என்னென்னில்; "பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாளயோகி திருவாய்மொழியைக்காத்த, குணவாளரென்று நெஞ்சே கூறு" என்று உபதேசரத்தினமாலையில் மணவாளமாமுனிகள் அருளிச்செய்தபடியே திருவாய்மொழியைக்காத்த ஆசிரியர் ஐவருள் முதல்வரான திருக்குருகைப்பிரான் பிள்ளானைக் கொண்டு ஆறாயிரப்படி வியாக்கியான மிடுவித்தது எம்பெருமானாரன்றோ. ("தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப்பிரான், பிள்ளான் எதிராசர் பேரருளால் — உள்ளாரும், அன்புடனே மாறன் மறைப்பொருளை யன்றுரைத்தது, இன்பமிகுமாறாயிரம்" என்ற உபதேசரத்தினமாலை காண்க.) முதன்முதலாகத் திருவாய்மொழியை வளர்த்தவர் எம்பெருமானாரேயென்க. "பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்" என்றது முதலான ஆசார்யஹ்ருதய ஸூக்திப்படியே திருவாய்மொழியை யடிபொற்றியே எம்பெருமானார் தர்சநத்தின் மஹார்த்தங்கள் போஷிக்கப்பட்டிருத்தல் முதலான காரண விசேஷங்களும் இங்கு அநுஸந்திக்கவுரியன.

திருவாய்மொழியில் "கங்குலும் பகலும்" என்ற ஒரு திருவாய்மொழி தவிர மற்று ஒரு பாசுரத்திலும் திருவரங்கநாதனுடைய ப்ரஸ்தாவமே இல்லையாயிருக்க "மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும்" என்று திருவாய்மொழி ஆயிரமும் ஸ்ரீரங்கநாதன் விஷயமாக அருளிச்செய்யப் பட்டதாகப் பேசுகைக்கு அடியென்? என்னில்; நம் பூருவாசாரியர்களனைவரும் நிர்வஹிப்பது இப்படியே; ஆழ்வார் திருவரங்கநாதனுக்கென்றே திருவாய்மொழியாயிரத்தையும் ஸங்கல்பித்து அதிலிருந்து மற்றைத் திருப்பதி யெம்பெருமான்களுக்குப் படியளந்தார் என்றுய்த்து பட்டர் அருளிச்செய்யும்படி, 'திருவேங்கடத்துக்கிவைபத்தும்" "வண்திருமோகூர்க்கு ஈத்தபத்திவை" என்றாற் போன்ற சொற்போக்கில் இந்த நிர்வாஹம் ஸ்வரஸமாக விளங்குமென்ப.

ஈற்றடியில், ஹிதம் என்னும் வடசொல் இதம் எனத்திரிந்தது. ... ... (•)

(இதுவும் பட்டரருளிச்செய்த தனியன்.)

மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியுந் தடையாகித் — தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன்
யாழினிசை வேதத்தியல்

பதவுரை.

குருகையர் கோன்	திருநகரியிலுள்ளார்க்குத் தலைவரான ஆழ்வார் (அருளிச்செய்த	தக்க நெறியும்	ஸ்வரூபாநுரூபமான உபாயத்தின் ஸ்வரூபத்தையும்
யாழின் இசை வேதத்து இயல்	வீணாகானம்போன்ற திருவாய்மொழிப் பாசுரங்கள்	தடை ஆகி தொக்கு இயலும் ஊழ் வினையும்	(பகவத்ப்ராப்திக்குப்) பிரதிபந்தகமாகிச் சேர்ந்திடக்கிற முன்னை வினைகளாகிற விரோதி ஸ்வரூபத்தையும்
மிக்க இறை நிலையும்	ஸர்வோத்க்ருஷ்டனான எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும்	வாழ்வினையும்	வாழ்வாகிற பரம புருஷார்த்த ஸ்வரூபத்தையும்
மெய்யாம் உயிர் நிலையும்	நித்யனான ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தையும்	ஓதும்	கூறுவன.

• • • — திருவாய்மொழியிற் சொல்லுகிற அர்த்தங்கள் இன்னவையென்கிறது இதில். திருமந்திரத்திற் சொல்லுகிற அர்த்தமே திருவாய்மொழியிற் சொல்லப்படுகின்றன: அதாவது அர்த்தபஞ்சகம். "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யகாத்மந: | ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச || வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸபுராணகா: | முநயஶ்ச மஹாத்மாநோ வேதவேதார்த்தவேதிந:." என்று சொல்லப்பட்ட ஐந்து அர்த்தங்களே ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ப்ரமேயமாயிருக்கும். அந்த அர்த்தங்கள் இத் தனியனில் அடைவே சொல்லப்படுகின்றன. சேதநர்களால் அடையப்படவேண்டியவனான எம்பெருமானுடைய ஸ்வரூபம், அவ்வெம்பெருமானை அடைகின்ற சேதநர்களின் ஸ்வரூபம், அடைவிக்கின்ற வழியின் ஸ்வரூபம், அடையவொட்டாமல் தடைசெய்யுமதான ப்ரதிபந்தகத்தின் ஸ்வரூபம், பிரதிபந்தகம் தொலைந்து பெறக்கடவதான பலத்தின் ஸ்வரூபம் — என்பதே அர்த்தபஞ்சகமாகும்.

எம்பெருமானே ஸர்வஸ்மாத்பரன், ஜீவாத்மா அவ்வெம்பெருமான் பக்கலில் சேஷத்வத்தையே தனக்கு நிரூபகமாகவுடையனாயிருப்பன், சரணாகதியே எம்பெருமானைப் பெறுதற்கு வழி, பொய்கின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமாகிற இவையே பிரதிபந்தகம், ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமைசெய்வதே பரமபுருஷார்த்தம் என்கிற இவ்வைந்து அர்த்தங்களும் இத் திருவாய்மொழியில் பன்னிப்பன்னி யருளிச்செய்யப்படுமாறு காண்க.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:.

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த

இராமாநுச நூற்றந்தாதியின்

தனியன்கள்.

வேதப்பிரான் பட்டர் அருளிச்செய்தவை.

(ஒருவிகற்ப நேரிசை வெண்பா.)

முன்னை வினையகல மூங்கிற்குடி யமுதன்
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும்—என்னுடைய
சென்னிக் கணியாகச் சேர்த்தினேன் தென்புலத்தார்க்
கென்னுக் கடவுடையேன் யான்.

முன்னை வினை	முன்னே செய்த பாபங்க ளெல்லாம்
அகல	ஒழிவதற்காக,
மூங்கில் குடி அமுதன்	'மூங்கிற்குடி' என்னுங் குலத்திலே தோன்றிய திருவரங்கத்தமுதனாருடைய
பொன் அம் கழல் கமலப்போது இரண்டும்	பொன்போல் அழகிய பாதாரவிந்தங்க ளிரண்டையும்
என்னுடைய சென்னிக்கு	எனது தலைக்கு
அணி ஆக	ஆபரணமாக
சேர்த்தினேன்	பொருந்தவைத்துக் கொண்டேன்;
யான்	இப்படி அமுதனாருடைய திருவடிகளைச் சூடப்பெற்ற அடியேன்
தென் புலத்தார்க்கு	தெற்குத் திக்கிலுள்ளாரான யமகிங்கரர்கட்கு
என்னுக்கு	எதுக்காக
கடவு உடையேன்	ப்ராப்தி யுடையேன்?

* * *:—நெடுநாளாக நான் செய்து போந்த கருமங்கள் தொலைந்து அக்கரும பலங்களின் அநுபவம் எனக்கு நேராம லிருப்பதற்கு ஒரு மஹோபாயம் கண்டறிந்து அனுட்டித்தேன்; அதாவது, மூங்கிற்குடியென்ற மஹாகுலத்திலே தோன்றிய திருவரங்கத்தமுதனாருடைய திருவடித் தாமரைகளை நான் சிரோபூஷண

மாக அணிந்துகொண்டேன்; அதனால் எனது ஸகல கருமங்களும் தீயினில் தூசாயொழிந்தன. இனி யமனுக்காவது யமபடர்களுக்காவது என்னருகே வருவதற்கு யாதொரு ப்ரஸக்தியுமில்லை: என்றாராயிற்று.

"முன்னை வினையகலச் சேர்த்தினேன்" என இயையும். [மூங்கிற்குடி.] வேயர்குலம், ஆஸுரிகுலம், கூரகுலம் என்பன போல மூங்குற்குடி யென்று ஒரு குலமுண்டாம். அமுதன்= இவர்க்கு, பெரியகோயில்நம்பி என்பது பண்டு வழங்கிவந்த திருநாமம். இவர் இயற்றிய நூற்றந்தாதியைத் திருச்செவி சார்த்தியருளிய எம்பெருமானார் இவருடைய வாக்கு அமுதவாக்கா யிராநின்றதென்று உகந்தருளி அமுதன் என்று திருநாமம் ப்ரஸாதித்தருளினராம். கமலப்போது = தாமரைப்பூ. அணி = ஆபரணம். சேர்த்தினேன்=சேர்த்தேன் என்றபடி: இன்—சாரியை.

என்னுக்கு + கடவுடையேன் = என்னுக்கடவுடையேன்; (கடைக்குறை) கெடுதல்விகாரப் புணர்ச்சி. என்னுக்கு=எதுக்காக என்கை; "என்னுக்கவளை விட்டிங்குவந்தாய்" என்றார் குலசேகரப் பெருமாளும். [கடவுடையேன்.] கடவு=ப்ராப்தி; அதாவது—உரிமை. .... *

கட்டளைக் கலித்துறை.

நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதென்று நண்ணினர்பால்
சயந்தரு கீர்த்தி யிராமானுசமுனி தாளிணைமேல்
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமு தோங்குமன்பால்
இயம்புங் கலித்துறையந்தாதி யோதவிசை நெஞ்சமே.

நெஞ்சமே	மனமே!,
நயம் தரு	விஷயங்களால் தரப்படுகிற
பேர் இன்பம் எல்லாம்	சிற்றின்பங்கள் யாவும்
பழுது என்று	வ்யர்த்தங்களென்று (அவற்றை விட்டொழிந்து)
நண்ணினர் பால்	தம்மை ஆச்ரயித்தவர்கள் விஷயத்தில்
சயம் தரு கீர்த்தி	ஸம்ஸார ஜயத்தைப் பண்ணிக் கொடுக்கும் புகழுடையரான
இராமாநுச முனி	எம்பெருமானாருடைய

தாள் இணைமேல்	இரண்டு திருவடிகள் விஷயமாக,	இயம்பும்	அருளிச்செய்த
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்து அமுது	சிறந்த குணசாலியான திருவரங்கத்தமுதனார்	கலித்துறை அந்தாதி	கட்டளைக் கலித்துறையினாலமைந்த நூற்றந்தாதியை
ஓங்கும் அன்பால்	கொழுந்துவிட்டோங்கிய பக்தியினாலே	ஓத	அத்யயநம்செய்ய
		இசை	ஸம்மதித்திருக்கக் கடவை.

* * *:—விஷயாந்தரங்களின் அநுபவத்தினாலுண்டாகும் சிற்றின்பங்கள் யாவும் அற்பங்களென்றும் ஹேயங்களென்றும் கருதி அருவருத்து அவற்றில் நசையற்றுத் தம்மைவந்து அடிபணிகின்ற மஹாநுபாவர்களுக்கு ஸம்ஸார ஸம்பந்தத்தை அறுத்தருளி மோக்ஷத்தைத் தந்தருள்பவராய் இப்பெரும்புகழ் பரவப்பெற்றவரான எம்பெருமானார் விஷயமாக, பகவத்பாகவத பக்தி முதலிய மஹாகுணங்கள் நிறைந்த திருவரங்கத்தமுதனார் பரமபக்தி தலையெடுத்துச் சொன்ன நூற்றந்தாதி யென்னும் திவ்ய ப்ரபந்தத்தை ஓதுவதற்கு நெஞ்சே! நீ இசைந்திடாய் என்கிறார். நல்வழி தீவழிகளிற் போதற்கு நெஞ்சே முதற்காரணமாதலால் அதனுடைய ஆநுகூல்யம் பெறுதற்குப் பாரிக்கின்றாரென்க.

நயம்=விஷயாந்தரங்கள். "நாணாமை நள்ளேன் நயம்" (முதல் திருவந்தாதி) என்றவிடத்து, நயம் என்பதற்கு விஷயாந்தரங்களென்று பொருள் அருளிச்செய்யப்பட்டிருத்தல் காண்க. **பேரின்பம்**—சிற்றின்ப மென்னவேண்டுமிடத்துப் பேரின்பமென்றது விபரீதலக்ஷணையாம். 'நல்லபாம்பு' என்னுமாபோலே. அன்றி, பேரின்பமுண்டென்று ப்ரமித்திருப்பார் கருத்தாலே சொல்லிற்றாகவுமாம்.

"ஆயிழையார் கொங்கை தங்கும் அக்காதலளற்றழுந்தி மாயுமென்னாவியை வந்தெடுத்தானின்று" என்று இவ்வமுதனார் தாமும், "𑌮𑌤𑌨𑌕𑌤𑍈𑌰𑍍 𑌨 𑌕𑍍𑌲𑌿𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌃" [மதநகதைர் நக்லிச்யந்தே யதீச்வரஸம்ச்ரயா:] என்று தூப்புல்பிள்ளையும், "𑌕𑌾𑌮𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌹𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌪𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂" [காமாதிதோஷஹரமாத்மபதாச்ரிதாநாம்] என்று பெரிய ஜீயரும் பணித்தவை இப்பாட்டின் முன்னடிகட்குச் சங்கையாக அநுஸந்தேயம்.

"....பழுதின்றி நண்ணினம்பால்" என்றும், "பழுதின்றி நண்ணிநன்பால்" என்றும் பாடபேதங்களுண்டாம். சயம்=ஜயம்; "நாவலிட்டுழி தருகின்றோம் நமன்றமர் தலைகள் மீதே" என்று மீசை முறுக்கிச் சொல்லப் பண்ணுகை.

[கலித்துறையந்தாதி.] "முதற்சீர்நான்கும் வெண்டளைபிழையாக், கடையொருசீரும் விளங்காயாகி, நேர்பதினாறே நிரைபதினேழென் றோதினர் கலித்துறை யோரடிக்கெழுத்தே" என்பது, கட்டளைக்கலித்துறை யிலக்கண முணர்த்தும் ஸூத்ரமாகும். கட்டளைக்கலித்துறையில் ஒவ்வோரடிக்கும் உரிய ஐந்துசீர்களுள் முதல் நான்கும் ஈரசைச்சீர்களும் ஐந்தாவது விளங்காய்ச்சீருமாக வெண்டளை பிறழாமல் வரும். வரவே, நேரசை முதலான அடி ஒற்றொழித்துப் பதினாறெழுத்தும், நிரையசை முதலான அடி ஒற்றொழித்துப் பதினேழெழுத்துமாகத் தானே அமையும். வெண்பாவுக்குப்போலக் கட்டளைக் கலித்துறைக்கு ஓரடியின் இறுதிச்சீரோடு அடுத்த அடியின் முதற்சீர் வெண்டளை தவறாது வரவேண்டுமென்ற நியதி இல்லை. அந்த நியதிகொள்ளின், நிரையசை முதற் கட்டளைக் கலித்துறையெல்லாம் காய்முன்நிரைவந்து கலித்தளையாய் வெண்டளைவழுவாமாறு காண்க. கலிநிலைத்துறை, கலிவிருத்தம், ஆசிரியவிருத்தம் என்பவை முதலிய சிலவற்றிற்குப் போலக் கட்டளைக் கலித்துறைக்கு நான்கு அடிகளும் அளவொத்து வரவேண்டுமென்னும் நியதியுமில்லை. வெண்பா ஆசிரியப்பா முதலிய சிலவற்றிற்போலவே அளவொவ்வாமலே வரலாம். கட்டளைக்கலித்துறை பெரும்பாலும் ஏகாரவீற்றதும், சிறுபான்மை ஓகாரவீற்றதுமாம். இந்நூலில் எல்லாப்பாசுரங்களும் ஏகாரவீற்றனவே. நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தத்தில், "கோலப்பகல்களிறொன்றுகற்புய்ய" என்ற நாற்பதாம் பாசுரமொன்றே ஓகாரவீற்றது. ஓகாரவீறாய் வருவதற்கு வேறு மேற்கோள் கிடைப்பரிது. ஏகார வுயிரீறாகவன்றி மெய்யீறாகவந்த கட்டளைக் கலித்துறைகளும் சான்றோர் செய்யுளிற் காணப்படுகின்றன.

இத்திவ்யப்பிரபந்தம் அந்தாதித்தொடையாற் பாடப்பட்ட பிரபந்தமாதலின் சொல் தொடர்நிலை பொருள் தொடர்நிலை யென்னும் இருவகையுள் சொல் தொடர்நிலையாம். [அந்தாதித் தொடை

யாவது—முன்னின்ற பாட்டின் இறுதி எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் பின்வரும் பாட்டின் முதலாகப் பாடுவது.] இந்நூல் இறுதிச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமையும்படி மண்டலித்துப் பாடப்பட்டுள்ளமையுங் காண்க. .... *

இதுவுமது.

சொல்லின் தொகைகொண் டுனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்து முன்நாமமெல்லா மென்றன் நாவினுள்ளே
அல்லும் பகலு மமரும்படிநல் கறுசமயம்
வெல்லும்பரம விராமாநுச விதென் விண்ணப்பமே.

அறு சமயம்	அப்ராமாணிகங்களான ஆறு மதங்களையும்
வெல்லும்	நிரஸித்தருளின
பரம	ஆரியரான
இராமானுச	எம்பெருமானாரே!
உனது அடி போதுக்கு	தேவரீருடைய பாதார விந்தங்களிலே
தொண்டு செய்யும்	வாசிக கைங்கரியம் பண்ணுகிற
நல் அன்பர்	பரமபக்தர்கள்
சொல்லின் தொகை கொண்டு	சப்த ராசிகளைக் கொண்டு
ஏத்தும்	துதிக்கிற
உன் நாமம் எல்லாம்	தேவரீருடைய திருநாமங்களெல்லாம்
என் தன் நாவின் உள்ளே	எனது நாவிலே
அல்லும் பகலும்	அஹோராத்ரமும்
அமரும்படி	பொருந்தியிருக்கும்படி
நல்கு	க்ருபை செய்தருளவேணும்;
இதுவே என் விண்ணப்பம்	இவ்வளவே அடியேன் செய்யும் விஜ்ஞாபனம்.

* * *:—கூறுஞ்சமயங்களாறுங் குலையக் குவலயத்தே வந்தருளின ஸ்வாமிந்! தேவரீருடைய திருவடிவாரத்திலே ஓலமில்லாச் சிறியேன் செய்யும் விண்ணப்பம் ஈதொன்றே; அது யாதெனில்; தேவரீரிடத்துப் பரமபக்தி பூண்டவர்கள் "தங்களன்பாரத் தமது சொல்வலத்தால் தலைத்தலைச் சிறந்து பூசிப்ப" என்ற கணக்கிலே தத்தம் சக்திக்கியன்றவாறாக சப்தராசிகளை யடுக்கி தேவரீருடைய திருநாமங்களை ஸங்கீர்த்தநம் பண்ணுவர்களன்றோ; அத்திருநாமங்

கள் இடைவிடாது என்நாவிலே திகழும்படி அநுக்ரஹித்தருள வேணும்; இஃதொன்றேயாய்த்து அடியேனுடைய ப்ரார்த்தனை— என்கிறார் ஒரு பக்த சிகாமணி.

தொகை என்பதற்கு ஸங்கியை என்று பொருள் கொள்ளுதலுமாம். எம்பெருமானார் விஷயமாக நூற்றெட்டுப் பாசுரங்கள் பாடவேணுமென்று ஒரு தொகையை நெஞ்சிலேகொண்டு நல்லன்பரான அமுதனார் அருளிச்செய்த தேவரீருடைய நாமமாலையாகிய நூற்றந்தாதிப் பிரபந்தமானது எப்போதும் என் நாவிலே பொருந்துமாறு அருளவேணும் என்றாராகவுங்கொள்க. "எங்கள் கதியே இராமானுச முனியே!, சங்கைகெடுத்தாண்ட தவராசா— பொங்குபுகழ், மங்கையர்கோனீந்த மறையாயிர மனைத்தும், தங்கு மனம் நீயெனக்குத் தா" என்றதுபோலவாம். .... *

[இம்மூன்று தனியன்களே ஸகல திவ்ய தேசங்களிலும் வழங்குமவை; மற்றொரு தனியன் மேனாட்டில் அநுஸந்திக்கப் படுகிறதாம்; அதாவது.]

இனியேன் குறைநமக் கெம்பெருமானார் திருநாமத்தால்
முனிதந்த நூற்றெட்டுச் சாவித்திரியென்னு நுண்பொருளைக்
கலிதந்த செஞ்சொற் கலித்துறையந்தாதி பாடித்தந்தான்
புனிதன் திருவரங்கத் தமுதாகிய புண்ணியனே.

(இதன் கருத்து:-) ஸர்வேச்வரன் ஆதியிலே ஸங்கல்பபூர்வகமாக உலகத்தைப் படைத்து முதலிலே சதுர்முகப்ரஹ்மாவுக்கு ஸாவித்ரியை உபதேசித்தான். இவ்வமுதனார் அந்த ஸாவித்ரியின் ஸாரார்த்தத்தை யெடுத்து இராமானுசன் என்னுந் திருநாமத்தோடிணக்கிக் கட்டளைக் கலித்துறையிலே வைத்துத் தாம் அநுபவித்த அநுபவத்தின் பரீவாஹரூபமாக இந்நூற்றந்தாதியைப் பாடிப் பின்புள்ளாரான நமக்கும் உபகரித்தருளினார். இனி நமக்கு ஐஹிகாமுஷ்மிகங்களில் ஒரு குறையுமில்லை என்பதாம். "திருநாமத்தால்" என்ற விடத்து, திருப்பெயரால் என்று பாடமிருப்பின் வெண்டளைக்குச் சேரும்.

தனியன் உரை முற்றிற்று.